பக்கங்கள் 8 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர் 19 ஆனி 29 றஜப் 25 இதழ் 152
யாழ்ப்பாணம் புதன்கிழமை 13-7-77

## வாகன அனுமதி பெற இன்றே விண்ணப்பிக்கவும்

யாழ்ப்பாணம், புதன்

தேர்தல் தினத்தன்று வாக்களிக்கச்செல்வதற்கு வாகன வசதி பெறுவதற்கு அனுமதி கோருவதற்கான இறுதித் தினம் நாளை ஆகும்.

அங்கவீனர்கள், நோயாளிகள் ஆகியோர் தமது வாக்குகளைப் பதிவுசெய்வதற்கு வாக்களிப்பு நிலையங்களுக்குச் செல்லமுடியாவிடின் வாகனங்களைப் பாவிக்கலாம் என்றும் இதற்கான அனுமதியைப் பெறுவதற்கு இம்மாதம் 14ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவேண்டும் என்றும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே

அனுமதி விண்ணப்பத்துடன் வைத்திய சான்றிதழ்களும் யாழ். தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்படவேண்டும். (கி-இ)

## அமிருக்கு செங்கோல் அன்பளிப்பு

மாவிட்டபுரம், செவ்.

'தளபதி' என்று தமிழர் விடுதலைக் கூட்டணியினரால் வர்ணிக்கப்படும் கூட்டணிச் செயலதிபர் திரு ஏ. அமிர்தலிங்கத்திற்கு 'செங்கோல்' அளிக்கப்பட்டது.

காங்கேசன்துறைத் தொகுதியில் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு. அமிர்தலிங்கத்தை ஆதரித்து மாவிட்டபுரம் மடத்தடியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் வைத்து இச்செங்கோல் வழங்கப்பட்டது.

பல இனமரங்கள், கொம்புகள், பனையோலை முதலானவை கொண்டு சிறந்தசிற்ப வேலைப்பாடுகளுடன் இச்செங்கோல் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த சிற்பாசிரியார் க. சொக்கலிங்கத்தினால் திரு. அமிர்தலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது. (உ)

# பரு. இ. போ. ச. ஊழியர் திடீர் வேலை நிறுத்தம்!

## இயக்கமுடியாத பஸ்களை மாற்றும்படி கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதிக்கு கொழும்பிலிருந்து அனுப்பப்பட்ட 'சப்பல்'ரக பஸ்கள் இயக்கமுடியாத நிலையில் இருப்பதன்காரணமாக பருத்தித்துறை இ.போ. ச. டிப்போ பஸ் சாரதிகளும் கண்டக்டர்களும் நேற்றுக் காலை முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் பஸ் பிரயாணிகள் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர்.

கொழும்பில் இருந்து இங்கு அனுப்பப்பட்ட 'சப்பல்' ரக பஸ்கள் பாவனைக்கு உதவாக வகையில் இருப்பதனல் அதனை இயக்க முடியாமலிருப்பதாக சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி இ. போ. ச. அதிகாரி ஒருவரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, 39 'சப்பல்' ரக பஸ்கள் அனுப்பப்பட்டன என்றும் இவற்றில் 19 பஸ்கள் மட்டுமே பாவனைக்குத் தக்கதாக உள்ளனவென்றும் அவர் தெரிவித்தார். எனினும் சமீபத்தில் 30 'அசோக் லேலண்ட்' ரக பஸ்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன என்றும் மேலும் இந்த ரக பஸ்கள் ஆறு இ. போ. ச. மேலிடத்தால் இங்கு அனுப்பிவைக்கப்படவிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்,

இவ்வேலை நிறுத்தத்தை சுமுகமாகத் தீர்த்துவைக்கும் பொருட்டு இ. போ. ச. அதிகாரிகள் வேலைநிறுத்தக்காரர்களை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்த முயன்றனர் என்றும் அம்முயற்சி கைகூடவில்லை என்றும் கூறப்படுகிறது.

ஓடக்கூடியதாக ஒரு சிலபஸ்களையாகுதல் முதலில் தரும்படி

[8-ம் பக்கம் பார்க்க]

### மருத்துவமாதர் வேலை நிறுத்தம்

## ஏனைய ஊழியர்களின் ஆதரவைப் பெறவும் முயற்சி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலை மருத்துவ மாதர் வேலைநிறுத்தத்தில் எவ்வித மாற்றமுமில்லை. வேலை நிறுத்தம் நேற்று தொடர்ந்து நடைபெற்றது.

வைத்தியசாலையைச் சேர்ந்த மற்றும ஊழியர்களையும் டாக்டர்களையும், தங்களுக்கு ஆதரவாக அனுதாப வேலை நிறுத்தத்தில் குதிக்குமாறு மருத்துவ மாதர் கோரியுள்ளதாக தெரியவருகிறது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள மற்றும், வைத்தியசாலைகளில் உள்ள ஊழியர்களையும், இவ்வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவிக்குமாறு கோரப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (கு)

## தேர்தல் கடமையில் 9 ஆயிரம் பொலிசார்

கொழும்பு, செவ்வாய்

தேர்தல் தினத்தன்று நாடு முழுவதும் 9000 பொலிசார் கடமையாற்றுவார்கள்.

இவர்கள் தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர் இம்மாதம் 19-ம் தேதி கடமையை பொறுப்பேற்பார்கள்.

நாட்டிலுள்ள 6,400 வாக்களிப்பு நிலையங்களில் பொலிசார் பணியாற்றுவார்கள்.

நாட்டின் எப்பாகத்திலும், அசம்பாவிதங்கள் ஏற்படும் பட்சத்தில், உடனடியாக அப்பகுதிக்கு அனுப்ப, 15 குழப்ப தடுப்பு பொலிஸ் பிரிவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பார்கள் (க)

## விமானக் கடத்தல்காரர் சரண்!

ஹெல்சிங்கி, ஜூலை 12

ரஷ்ய விமானத்தை பின்லாந்துக்குக் கடத்திச் சென்ற இரண்டு ரஷ்ய கடத்தல் காரர்களும் ஹெல்சிங்கி விமான நிலையத்தில் சரணடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது. (இ)

## சட்டசபையில் காமராஜர் படம்

### எம். ஜி. ஆர். அறிவிப்பு

சென்னை, ஜூலை 12

மறைந்த தலைவர் காமராஜரின் உருவப்படம் தமிழ்நாடு சட்டப்பேரவையில் திறந்துவைக்கப்படும். படத்தை திறந்துவைக்க லோகசபை சபாநாயகர் திரு.சஞ்சீவரெட்டி அழைக்கப்பட்டிருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தமிழ்நாடு சட்டப்பேரவையில் இத்தகவலை வெளியிட்டபோது எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணாநிதி உட்பட அனைவரும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். திரு. கருணாநிதி தம் சார்பிலும் தமது கழத்தின் சார்பிலும் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டதுடன் ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இன்று சபையில் படி அரிசிப் பிரச்னை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. அ.இ.அ.தி.மு. கழக உறுப்பினர் கோபால் பேசும்போது முன்னைய அரசு அண்ணாவின் படி அரிசித் திட்டத்தை கைவிட்டுவிட்டது என்று கூற தி.மு. க. உறுப்பினர்களின்குறுக்கிடுவலுத்தது முதல்வர் எம். ஜி. ஆர். எழுந்து படி அரிசித்திட்டத்தை எமது கழகம் தனது தேர்தல் அறிக்கையில் சேர்த்துக் கொள்ளவில்லை. அதைவிட இப்பொழுது தண்ணீர்ப் பிரச்னைதான் முக்கியமானது. மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாவிட்டால் மக்களிடம் சொல்லிவிட்டுப் பதவியிலிருந்து விலகொள்வோம் என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் மு. கருணாநிதி எழுந்து அண்ணாவின் படி அரிசித் திட்டத்தைப் பாவிகளான நாங்கள்தான் செய்யத்தவறி விட்டோம். அண்ணா வழியில் செல்வதாகக்கூறும் நீங்களாவது நிறைவேற்றுங்களேன் என்று கேட்டுக் கொண்டார்.

இது தொடர்பாக முதல்வர் தமது பதிலை 15ம் திகதி வெளியிடுவதாகக் கூறினார்.

அரசத் தரப்பினரும்-எதிர்க்கட்சி தி.மு.க. வினரும் அடிக்கடி அண்ணாவின் பெயரைக் குறிப்பிடுவதைக் சுட்டிக்காட்டிய கம்யூனிஸ்ட் உறுப்பினர் உமாநாந் இங்கு நாங்களும் இருக்கிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள், அண்ணாவை பற்றிக்கவலைப்படும் அளவுக்கு நீங்கள் மக்களைப்பற்றிக் கவலைப் படுவதைக் காணோம் என்றார்.

அண்ணா வழியில் செல்பவர்களே பெரும்பாலான உறுப்பினர்களாக இருப்ப தால் அண்ணாவின் பெயரை அடிக்

(8-ம் பக்கம் பார்க்க)

## கடத்தல் பொருட்கள்: ரூ. 4000 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சோனகத் தெருவை அடுத்துள்ள சிறிய வீதி ஒன்றிலுள்ள இல்லத்திலிருந்து பெருந்தொகையான கடத்தல் சாறிகள், சாரங்கள் ஆகியவற்றை யாழ். பொலிசார் கைப்பற்றினர்.

யாழ். பொலிசாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்துஅவ்வீட்டைச்சோதனையிட்ட பொலிசார் 38 பழைய கார்ட் சாரங்கள், 77 நைலைன் சாறிகள், 67 டசின் ஊதுபத்திப் பெட்டிகள் உட்பட பல கடத்தல் பொருட்களைக் கைப்பற்றினர்.

8 ஆயிரம் ரூபா பெறுமதியான இப்பொருட்களை யாழ். சுங்க இலாகாவினர் பறிமுதல் செய்ததுடன் குறிப்பிட்ட வீட்டுச் சொந்தக்காரருக்கு 4 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. (இ)

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, புதன்

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 622-வது தேசிய சுவீப் முடிவுகள் வருவாறு:-

1-வது பரிசு
**07 C 0730**
1 லட்சம் ரூபா

2-வது பரிசு
**35 S 0424**
40 ஆயிரம் ரூபா

3-வது பரிசு
**15 P 0049**
10 ஆயிரம் ரூபா

தலா 1000.00 ரூபா பெறும் 100 ஆறுதல்; பரிசுகள்;

| | |
|---|---|
| 05 A 0366 | 13 A 0747 |
| 44 A 0938 | 06 B 0172 |
| 08 B 0955 | 35 B 0646 |
| 37 B 0372 | 38 B 0009 |
| 38 B 0741 | 05 C 0723 |
| 06 C 0677 | 16 C 0121 |
| 25 C 0648 | 33 C 0694 |
| 39 C 0511 | 41 C 0763 |
| 06 D 0945 | 07 D 0168 |
| 16 D 0827 | 18 D 0760 |
| 21 D 0708 | 35 D 0758 |

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பயிற்சி

6 மாத மோட்டார் மெக்கானிக் டிப்ளோமா பயிற்சி 01-08-1977 ல் ஆரம்பமாகவுள்ளது நிச்சயமான வேலை வாய்ப்பைத் தரக்கூடிய விதத்தில் பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பல வழிகளில் பயனடைவீர்கள் என்பதை நாம் உறுதிப்படுத்துகின்றோம். அதிபர், இன்ஸ்டிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/8 ஸ்ரான்லி வீதி, மொம்சாக் கட்டிடம் யாழ்ப்பாணம். 6635

அமெரிக்காவில் மேலதிக வெல்டிங் பயிற்சிபெற்று அமெரிக்கன் வெல்டர்ஸ் அசோசியேசன் அங்கத்தவராகி உலக நாடுகளில்தொழில்வாய்ப்புப் பெறுங்கள் சொற்ப இடங்கள் மாத்திரமே விபரங்களுக்கு நேரில் வரவும் அல்லது முத்திரையிடப்பட்ட தபால் உறை அனுப்பி பெறவும். கீத பொன்கலன் சட்டத்தரணி, 2/B அத்தியடி புதுவீதி யாழ்ப்பாணம். 6638

### கல்வி

மகாத்மாகாந்தி கல்வி நிலையம், சுன்னுகம். 5, 6, 7, 8 N. C. G E, H. N. C. B. மீட்டல் G. C. E. (O/L) (A/L) வகுப்புக்கள். தொடர்புகொள்ளவும். நிருவாகி. 6639

### தவறிவிட்டது

கொடிகாமம் றெயில்வே ஸ்ரேசனில் என்னுடைய பிரம்புக்கூடையுடன் பிரதான சாமான்களும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஸ்ரேசன் மாஸ்ரர் கொடிகாமம் அவர்களிடம் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். செ. இராசநாயகம். 6644

## சிற்றுண்டிக் கடைகள் வைப்பதற்கான அனுமதி வழங்கல்

யாழ்/பழைய பூங்காவினுள் (அரசாங்க அதிபர் வாசஸ்தலக் காணிக்குள்) 1977 யூலை, 21ம் நாள் இரவு இடம்பெறவிருக்கும் தேர்தல் முடிவு அறிவித்தலை முன்னிட்டுச் சிறு கடைகளை வைப்பதற்கு அனுமதி வழங்கப்பட இருக்கின்றது.

விரும்புவோர் உடனடியாக யாழ். கச்சேரிப் புத்தகசாலையாளருடன் தொடர்புகொள்ளவும்.

ஒப்பம்

செ. கணேஷ்

யாழ்/மா. அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி,
யாழ்ப்பாணம்.
8-7-77. 6643

## சென். பற்றிக்ஸ் பரிசளிப்பு விழா

அரியாலை, செவ்வாய்

சென் பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை மத்தியூஸ் மண்டபத்தில் அதி வணக்கத்துக்குரிய ஆண்டகை கலாநிதி பி. தியோகுப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

இலங்கைச் சர்வகலாசாலை கொழும்பு வளாகத்தைச் சேர்ந்த கணிதப்பேராசிரியர் கலாநிதி வலன்ரைன் யோசேப் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருக்கிறார்.

திருமதி யோசேப் பரிசில்களை வழங்குவார். (அ)

---

எஸ். அமிர்தலிங்கம்
சட்டத்தரணி
ஜே. பி. யூ. எம்.

283-ம் பிரிவின் கீழான

**இடைக்காலக் கட்டளை**

**இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்**

வலயம்-யாழ்ப்பாணம்.
இல. 373

சுன்னுகம் ஊரெழு மேற்கைச் சேர்ந்த சின்னையா அப்புத்துரை பெண் சின்னச்சிப்பிள்ளையின் மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்கள் சம்பந்தப்பட்டவை

—காலஞ்சென்றவர்.

சுன்னுகம், ஊரெழு மேற்கு. அப்புத்துரை மகள் புனிதவதி.

—விண்ணப்பகாரி.

எதிராக

1. சின்னையா அப்புத்துரை. 2. அப்புத்துரை பரஞ்சோதி, 3. கந்தையா குமாரசாமியும் பெண் 4. மகேஸ்வரியும். 5. கே. விஜயரத்தினம் கைம்பெண் இராஜேஸ்வரி எல்லோரும் இல. 12, ஜலான் முகிபான், ரமான் முகிபா, இப்போ மலேசியா, 6. மார்க்கண்டு நாகரத்தினமும் பெண் 7. அழகேஸ்வரியும், 8. வல்லிபுரம் யோகரத்தினமும் பெண் 9. நீலாதேவியும், எல்லோரும் ஊரெழு மேற்கு, சுன்னுகம்.

பிரதிவாதிகள்.

1975-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ந் திகதியைக் கொண்ட 280-ம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் உறுதிக்கூற்றுக்கள் பார்த்தமாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததின்பேரில் யாழ்ப்பாண நீதிபரிபாலன தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்பேரில்

1977-ம் ஆண்டு ஆடி மாதம் 19-ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்பாக ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரண சாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகப்பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரியே தத்துவகாரி என்ற வகையில் உரித்துடையவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு நிருவாகத் தத்துவப்பத்திரம் வழங்கப்படுகிறதென்றும் கட்டளை இடுகிறேன்,

(ஒப்பம்)
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவகார அதிகாரி.
யாழ்ப்பாணம்.

1977-ம் ஆண்டு
வைகாசி மாதம் 31-ந் திகதி
6645

## சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம் புதன்

இணுவில் சிவகாமி அம்மன் கோவில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இம்மாதம் 18-ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் நடைபெறும். இப்புதிய சித்திரத்தேரில் செவ்வாய்க்கிழமை அம்பிகை பவனி வருவார்.

(கா-இ)

---

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

---

# தமிழ்த் தலைவர்களை சிறைவைத்தவர்கள் இன்று பேச்சுவார்த்தைக்கு வருகின்றனர்

## கொழும்பில் ஆலாலசுந்தரம்

கொழும்பு, செவ்வாய்

''இந்நாட்டில் வாழுகின்ற தமிழ், முஸ்லிம், மலையக மக்கள் அனைவரும் மிகப் பெரிய சக்தியாக இணைந்துவிட்டார்கள். நாம் இனிமேல் நிம்மதியாக ஆட்சி நடத்த முடியாது என்ற பதட்டத்தால் சிங்கள தேசியக் கட்சிகள் இன்று பேச்சுவார்த்தை, வட்டமேசைமகாநாடு என்று பேசிவருகின்றன. தலைவர்களைச் சிறையில் பூட்டியவர்கள் ஒப்பந்தங்களைக் கிழித்து எறிந்தவர்கள், ஆறம்சத்தை சலக்கி வீசியவர்கள் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன் தலைவர்களுடன் பேசி வருகிறார்கள்.''

தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஆதரவுடன் கொழும்பு மத்தியில் போட்டியிடும் இ. தொ. கா. வேட்பாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியை ஆதரித்து மருதானை பஞ்சிக்காவத்தை வீதியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசுகையில் சட்டத்தரணி மு. ஆலாலசுந்தரம் இவ்வாறு பேசினுர்.

தமிழ்த் தொழிற்சங்கக் கூட்டணியின் பொதுக்காரியதரிசி திரு. ஐ. தி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. ஆலாலசுந்தரம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

வவனியாவில் நடைபெற்ற தந்தை செல்வாவின் பிறந்த நாள் விழாவில் உரையாற்றிய முஸ்லிம் பெரியார் டாக்டர் கலீல், இனிமேலும் நாம் சிங்கள தேசியக் கட்சிகளின்பின் நிற்கமுடியாது. தமிழரும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து போராடுவதன் மூலமே நமது உரிமைகளை நிலைநாட்ட முடியும் என்றுர். தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போராடுவது. தவிர முஸ்லிம் மக்களுக்கு வேறு வழியில்லை என்பதினை நன்கு உணர்ந்த நிலையில்தான் முஸ்லிம்களுக்கு ஒரு புதிய தலைமையை ஏற்படுத்த முஸ்லிம் ஐக்கிய முன்னணி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்துள்ளது.

### தனிநாட்டில் முஸ்லிம்களின் நிலை

தந்தை செல்வா சமஷ்டி கோரியபோதும்கூட கிழக்கில் முஸ்லிம் மக்களுக்கு தனி அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்றே சொன்னுர். தனிநாடு கோரும் இவ்வேளையிலும் முஸ்லிம்கள் தமக்கு ஒரு தலைமையை ஏற்படுத்த அவர்கள் பிரிந்து செல்லலாம் என்றே சொன்னுர்.

பரிகாரமும் ஒன்றேதான். எனவேதான் நாம் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஒன்றுசேர்ந்தோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் இங்கு போட்டியிடும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர் திரு. செல்லச்சாமிக்கே தங்களது முழு ஆதரவையும் இத்தொகுதி முஸ்லிம்கள் அளிக்கக்கடமைப் பட்டிருக்கிறுர்கள்.

தமிழர் விடுதலைக்கூட்டணி நடத்துகின்ற இத்தருமயுத்தத்தில் முஸ்லிம் மக்கள் தளபதிளாகட்டும்.

திரு. செல்லச்சாமி இத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டால் முஸ்லிம்களுக்காக தேசிய அரசுப்பேரவையில் 26 உறுப்பினர்கள் இருப்பார்கள்! எம்முடைய பிரச்சினைகளை தமிழர் விடுதலைத் கூட்டணியியுடன் இணைந்து ஒரே குரலில் அரபுநாடுகளுக்கு எடுத்துக்கூறுவோம். ஐக்கிய நாடுகள் சபையில் 45 அங்கத்துவநாடுகள் முஸ்லிம் நாடுகள் அவற்றுக்கு நமது பிரச்சினைகளை அறிவிப்போம். எமது சம்மதமின்றி அரபு நாடுகளிலிருந்து இலங்கை எவ்வித உதவியும் பெறமுடியாதவாறு செய்வோம்.

# தனிநாட்டுக் கோரிக்கைக்கு இ. தொ. கா. எதிரானதல்ல

## — தொண்டமான்

### திட்டமிட்டு உரிமை பறிப்பு

''கடந்த 30 வருட அரசியல் ஆட்சிக்கு சிங்கள அரசாங்கங்கள் இந்நாட்டில் வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளை திட்டமிட்டு பறித்தே வந்திருக்கின்றன. பிரஜாவுரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்தபோது இச்சட்டம் எதிர்காலத்தில் இங்கு வாழ்கின்ற தமிழ், முஸ்லிம் மக்களையும் பாதிக்கும் என்று சொன்னுர் தந்தை செல்வா.

''திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவி எமது பிரதேசங்களைப் பறித்தார்கள். இது நடைபெற்றிருக்காவிட்டால் இன்று அம்பாறையிலிருந்தும் சேருவலை தொகுதியிலிருந்தும் நிச்சயமாக முஸ்லிம்களே தெரிவு செய்யப்படுவார்கள். இந்த இரண்டு தொகுதிகளையும் இன்று முஸ்லிம் மக்கள் இழந்து நிற்கிறுர்கள்.

### பௌத்தம் மட்டும் வளருகிறது

''புதிய அரசியல் சட்டத்தில் தமிழ், இஸ்லாமிய மக்களின் தனித்துவத்தை இல்லாமல் செய்யவேண்டும் என்பதற்காகவே பௌத்தத்திற்கு மட்டும் இடமளித்து எமது வரிப்பணத்தில் பௌத்தத்தை வளர்க்கிறுர்கள்.

### தமிழ் உயிர்களுக்கு நடவடிக்கை இல்லை

தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட பிரபல கேடி மறுசீரா தூக்கிலிடப்பட்டு இறந்தானு? அல்லது இறந்தபின் தூக்கிலிடப்பட்டானு என்பதை விசாரிக்க கமிஷன் நியமித்த அரசாங்கம், தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது பத்து தமிழர்கள், செம்மணியில் ஒரு தமிழ் இளைஞன், புத்தளத்தில் 7 முஸ்லிம்கள், மலையகத்தில் ஒரு தமிழ் இளைஞன் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டபோது ஏதும் நடடிக்கை எடுத்ததா?

இவை அனைத்தையும் உணர்ந்த நிலையில் தான்

### உதுமாலெப்பை பேச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கமான முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் செயளாளர் டாக்டர் உதுமாலெப்பை பேசுகையில் கூறியதாவது:

''இஸ்லாமிய இனம் கடந்த 25 ஆண்டுகளாக அநுபவித்த இன்னல்களுக்கும் தீர்வுகாணத் துணிந்துவிட்டது. இனியும் எம்மை அழிப்பதற்கு நாம் தயாரில்லை. எம்முடைய நிலத்தில் 1400 ஏக்கர் நிலம் கிழக்கிலங்கையில் பறிபோய்விட்டது. ஐக்கியதேசியக் கட்சியையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியையும் தங்களது தலைமையாக ஏற்றுக்கொண்டிருந்ததால் இந்த அநியாயங்கள் குறித்து முஸ்லிம் பிரதிநிதிகள் எதுவுமே பேசமுடியாத சட்டங்களை மீளமுடியாத கவலைக்கிடமான நிலையில் இருந்து வந்திருக்கிறுர்கள். இனியும்

### அடிமை விலங்கை அறுக்க...

இங்குள்ள முஸ்லிம் மக்கள் ஒவ்வொருவரும் எம்முடைய அடிமை விலங்கை அறுக்க அளிக்கிறேன் 'எனதுவாக்கை' என்ற புனித உணர்வோடு தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு வாக்களியுங்கள்.

### தொண்டமான் பேச்சு

திரு. எஸ். தொண்டமான் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

தமிழ்பேசும் மக்கள் அனைவரும் ஒரே அணியில்- உரிமைபெற்றே தீருவது என்று கங்கணங்கட்டிவிட்டார்கள் என்பதை தீரஉணர்ந்துகொண்டதால், தேர்தலில் வெற்றி பெற்றதும் தமிழர் பிரச்சினையைத்தீர்ப்போம் என்று ஐக்கிய தேசியக்கட்சியினரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியினரும், பேசிவருகிறுர்கள். இவர்

## 25 வருட இன்னலுக்கு முடிவுகாண முஸ்லிம்கள் துணிந்துவிட்டனர்

### — டாக்டர் உதுமாலெப்பை

நாம் இந்நிலைக்கு தயாரில்லை. நம்முடைய உரிமைகள் காப்பாற்றப்பட நமக்கு ஒரு தலைமை தேவை. இதனுல் தான் முஸ்லிம் ஐக்கிய முன்னணியை நாம் உருவாக்கினேம். அதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஓர் அங்கமாக்கினேம். இதனுல் எமக்கென்ஒரு தனித்தலைமை உருவாகிறது.''

''புத்தளத்தில் 7 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டபோது அதற்காகக் குரல்கொடுத்தவர் தந்தை செல்வா மட்டும் தான்.'

இஸ்லாமியரை நாம் ஆள விரும்பவில்லை. அவர்கள் தங்களுக்கு ஒரு தலைமையை ஏற்படுத்திக் கொள்ளட்டும் என்று தந்தை செல்வா சொன்னுர்.

இந்நாட்டில் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டிருப்பது ஒரே பிரச்சினைகள் நாம். எனவே அவற்றிற்குப்

கள் இவ்வளவு காலமும் எங்கே இருந்தார்கள்? இவர்களுடைய பேச்சைக்கேட்டு இங்குள்ள முஸ்லிம் மக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள்.

### தனிநாடு அமைத்தால்...

தனியரசு அமைத்தால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ்பேசும் மக்களின் நிலை என்ன? அவர்களெல்லோரும் தமிழ் ஈழத்துக்குச் செல்ல தயாராக இருக்கிறுர்களா? இவ்விடங்களில் வாழ்பவர்களைப் பற்றி தனிநாடுகோருபவர்கள் சிந்திக்கிறுர்களா? என்று சில கேள்விகளை சிலர் வேண்டுமென்று குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகவே கேட்கிறுர்கள். இக்கேள்விகளில் அர்த்தம் இல்லை; இவற்றுக்கு பதில் அளிக்கவேண்டிய அவசியமும் இல்லை. இந்தியாவிலி

(7-ம் பக்கம் பார்க்க)

# லோகசபை தேர்தலில் ஒரு நாள் சுற்றுப்பயணத்திற்கு இந்திரா 3 லட்சம் ரூபா செலவிட்டாராம்

புதுடில்லி, ஜூலை. 12 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி கடந்தலோகசபைத் தேர்தலில் ஒரு நாள் சுற்றுப் பயணம் செய்வதற்காக சுமார் 3 லட்சம் ரூபா செலவிட்டுள்ளாராம்.

கடந்த மார்ச் மாதத்தில் நடைபெற்ற லோகசபைத் தேர்தலின்போது குஜராத் மாநிலத்தில் தேர்தல் பிரசாரம் செய்யும் பொருட்டு அங்கு ஒருநாள் மட்டுமே சுற்றுப் பிரயாணம் செய்தற்கு 2 லட்சத்து 84 ஆயிரம் ரூபாவை திருமதி. இந்திராகாந்தி செலவு செய்தாராம்.

குஜராத் மாநில முதன் மந்திரி திரு. பாபுபாய் பட்டேல் நேற்று இந்தகவலை குஜராத் சட்டசபையில் உறுப்பினர்ஒருவரின் கேள்வி ஒன்றுக்கு அவர் எழுத்து மூலம் அளித்த பதிலிலேயே பட்டேல் மேர்கண்ட தகவலைத் தெரிவித்துள்ளார். [இ]

அமெரிக்காவில் கடந்த ஆண்டு

## 1,40 000 தொலைபேசி சம்பாஷணைகள் ஒற்றுக் கேட்கப்பட்டனவாம்

நியூயோர்க், ஜூலை. 12 ''அமெரிக்கப் பிரஜைகள் மீது வேவு பார்ப்பதற்கு அமெரிக்க அரசு 164,000 ஏஜண்டுகளை நியமித்துள்ளது. 1976ல் மட்டும் இவர்கள் அமெரிக்க பிரஜைகளின் 140,000 தொலைபேசிச் சம்பாஷணைகளை ஒற்றுக் கேட்டனர். 1830 லட்சம் அமெரிக்கர்களின் கைவிரல் அடையாளங்கள் அமெரிக்கப் பொலிஸ் தலைமையகத்தில் உள்ளன. 'நியூயோர்க் டைம்ஸ்' மேற்கண்ட தகவல்களை வெளியிட்டுள்ளது.

''சொந்தநாட்டுப் பிரஜைகளை வேவுபார்த்துக் கொண்டும், அவர்களது சுதந்திரங்களை மீறிக்கொண்டும் வெளிநாடுகளிலுள்ள மக்களின் மனித உரிமைகள் பற்றி அமெரிக்க அரசு பெரிதாகப் பேசிவருவது விசித்திரமானது'' என்றும் அப் பத்திரிகை எழுதியுள்ளது. [இ]

## அவசரநிலையை தமிழக அரசு கண்டிக்காததற்குகண்டனம் தி. மு. க. உறுப்பினர் கேள்விக்கணை

சென்னை. ஜூலை 12 நெருக்கடிநிலை அமுலிருந்தபோது கருணாநிதியின் பிறந்த நாள் விழாவுக்கு கொடி ஏற்றியதற்காக தாம் சென்னைச் சிறைச்சாலையில் நிர்வாணமாக நிறுத்தப்பட்டதாக தி மு க தமிழ்நாடு சட்டசபை உறுப்பினர் திரு. மு அரங்கநாதன் சட்ட சபையில் தெரிவித்தார்.

இது அவசரகாலச் சட்டத்தின் கொடுமை என்றும் இந்த அவசரகாலச் சட்டத்தால் 2 உயிர்களை தி மு க இழந்ததாகவும் இந்த அநியாயங்களை ஆளுநர் உரையில் கண்டிக்காதது தவறென்றும் திரு அரங்கநாதன் சுட்டிக்காட்டினார்.

### அண்ணபடம் எங்கே?

தி மு க கலைக்கப்பட்ட பின் அறிஞர் அண்ணாதுரையின் படங்கள் அரசாங்கக் காரியாலயங்களிலிருந்து அகற்றப்பட்டதென்றும் இது தொடர்பாக அண்ணா தி மு க முன்பு கூடி தாம் ஆட்சிக்கு வந்தால் அப்படங்களை திரும்ப உடனடியாக அரசாங்கக்காரியாயலங்களில் மீளவும் வைப்பது என்றும் தீர்மானித்தனரென்றும் இன்று அத்தீர்மானத்தின் நிலை என்ன என்றும் திரு. அரங்கநாதன் சபையில் கேட்டார். (ஒ இ)

## 11 பொலிசார் மீது விசாரணை

புதுடில்லி, ஜூலை 12 நெருக்கடிநிலை அமுலில் இருந்தபோது குஜராத்தில் பொதுமக்களைக் கொடுமைப் படுத்தியதாகக் குற்றம் சாட்டப்படுள்ள 7 அரசாங்க அதிகாரிகளும் 11 பொலிஸ் அதிகாரிகளும் இப்போது விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர் என்று குஜராத் மாநில அரசு அறிவித்துள்ளது. [இ]

## புதிய வான்மண்டலம்

லண்டன், ஜூலை 12 பால்மண்டலம் என்று அழைக்கப்படும் எமது வான மண்டலத்துக்கு அயலில்மற்றொரு வானமண்டலம் இருக்கிறது. எடின்பரோ றேயல் அவதான நிலையத்து வானூலார்பிடித்துள்ளபுகைப்படங்கள் இதனை உறுதிப்படுத்துவதாக அறிவிக்கப்படுகிறது. இது ஒரு குறுகிய மண்டலம் என்றும் அரை மில்லியன் ஒளி ஆண்டுகளுக்கு அப்பால் அமைந்துள்ளதென்றும் கூறப்படுகிறது.

ஆஸ்திரேலியாவிலிருந்து தென் வானத்தில் வானூலார் நடத்திய ஓர் ஆராய்வின் போது இவ்வான மண்டலம் கண்டுபிடிக்கப்பட்டதாம். பிரிட்டன 'ஷ்மிட்' தூரதரிசினி மூலம் புகைப்படங்கள் பிடிக்கப்பட்டுள்ளன.

இந்த ஆராய்வின் மூலம் ''விண்வெளி நேராக உள்ளதா வளைந்துள்ளதா? என்ற கேள்விக்கு விடை கண்டுபிடிப்பதற்கான தகவல்கள் எமக்கும் கிடைத்துள்ளன'' என்று றேயல் அவதான நிலைய அதிபர் டாக்டர் வின்சன்ட் ரெடிஷ் கூறுகிறார். ''நட்சத்திரங்களும் வானமண்டலங்களும் எவ்வாறு உருவாகின என்பது சம்பந்தமாக இது காலவரைநிலவி வந்த நம்பிக்கைகளை இவ்வாராய்வின் முடிவுகள் மாற்றிவிடலாம்'' என்றுஅவர் மேலும் கூறுகிறார். (இ)

# சென்னை சிறையில் இளைஞர் மர்ம மரணம்

## நெருக்கடி நிலையில் நடந்ததாம்

சென்னை, ஜூலை 12 தமிழ்நாட்டில் அவசரகால நிலை அமுலில் இருந்தபோது சென்னை மத்திய சிறையில் சென்னை சூளைமேட்டைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மர்ம மானமுறையில் மரணமாகி உள்ளார் இதுகுறித்து அந்த இளைஞனின் தாய் பாநில கவர்னரிடம் நீதிகேட்டு மனுச்செய்துள்ளார்.

இந்த இளைஞனின் தாயாரான திருமதி முனியம்மாள் ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது:

'எனக்கு வயது 50. என்கணவர் இறந்து ஐந்து வருடங்கள் ஆகின்றன. தள்ளாத வயதிலும் என்னை எனது மகனே கூலிவேலைசெய்து காப்பாற்றி வந்தான்.

அவசரகாலநிலை அமுலில் இருந்தபோது என் மகனை ஒரு நாள் சந்தேகத்தின்மீது கைது செய்துசென்றுர்கள்

திடீரென ஒருநாள் என் மகன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என தந்தி ஒன்று வந்தது. நான் ஆஸ்பத்திரிக்குச் சென்றேன். அங்கே மகன் இல்லை. சிறைச் சாலைக்குப்போனேன் அங்கே என்மகனின் பிணம்தான் காணப்பட்டது.

மிக்க தேகாரோக்கியத்துடன் இருந்த என் மகன் நோயினால் இறந்திருக்கமுடியாது.

சிறையிலேயே மாண்டுபோன என்மகன் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று வநத தந்தி முற்றிலும் புறம்பானது.

இதுபற்றி மாவட்ட ஆட்சியாளரிடம் பலமுறை முறையிட்டிருந்தும் இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை நீங்கள் உடனே நடவடிக்கை எடுங்கள். (கி-இ)

## 3 பேர் மட்டுமே பணயம்

மாஸ்கோ, ஜூலை, 12 ரஷ்யவிமானத்தைக் கடத்திய கடத்தல்காரர்கள் ஹெல்சிங்கில் 24 மணிநேர பேச்சு வார்த்தையின்பின் 3 பயணிகளை மட்டும் வைத்துக் கொண்டு மிகுதி 69 பேரையும் விடுதலை செய்தனர் என்று அறிவிக்கப்பட்டது. [இ]

## தென்னையிலிருந்து மலிவான வீடுகள்

லண்டன், ஜூலை 12 முதிர்ச்சியடைந்த தென்னை மரங்களைக்கொண்டு வீடு கட்டுவதற்கு வேண்டிய கற்களைத் தயாரிக்கலாம் என பிரிட்டனில் உள்ள வெப்ப வலய உற்பத்திகள் ஸ்தாபனம் கண்டு பிடித்துள்ளது.

இம்மரங்களைத் தூளாக்கி சிமெந்துடன் கலந்து கற்களைத் தயாரிப்பதன் மூலம் உறுதியான, மலிவான வீடுகள்கட்ட முடியுமென இந்த ஸ்தாபனத்து விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இதன் பொருட்டு அவர்கள் பல பரிசோதனைகளை நடத்திவருகின்றனர். (இ)

## பாக். தேர்தல் ஏற்பாடுகளைக் கவனிக்க விசேட குழு

இஸ்லாமாபாத், ஜூலை 12 பாகிஸ்தானில் எதிர்வரும் அக்டோபரில், பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கும் பொருட்டு விசேட கமிட்டி ஒன்றை இராணுவ அரசு நியமித்துள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான இக்குழு பொதுத் தேர்தலுக்கானசகல சட்ட விதிகளையும் வரையும். (இ)

# தமிழர்கூட்டணியின் வெற்றி 7 கோடி தமிழர்களின் வெற்றி

## லண்டன் ஈழவிடுதலைமுன்னணி அறிக்கை

லண்டன், ஜூலை 12 ''எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைக்கும் வெற்றி உலகில் பரந்து வாழும் ஏழு கோடி தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்குக் கிடைக்கும் முதல் வெற்றியாகும் ''

லண்டனில் உள்ள 'ஈழவிடுதலை முன்னணி' விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

லண்டன் 'ஈழவிடுதலை முன்னணி'யின் சார்பில் அதன் செயலாளர் திரு என். எஸ். கிருஷ்ணன் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''ஈழநாட்டில், நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல், ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்று முக்கியத்துவம் பெற்றதாகும். இத் தேர்தலில் ''தமிழர் விடுதலைக் கூட்டணி''க்கு கிடைக்கும் வெற்றி ஏழு கோடி தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்குக் கிட்டும் முதல் வெற்றியாகும்.

''சிங்கள ஆட்சியாளர்களுக்கும், இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களின் முடிவை அறிந்திட ஆவலுடன் காத்திருக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும், தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையையும், வலுவினையும்விடுதலைவேட்கையையும் வெளிக்காட்டிட, அரியவாய்ப்பு எதிர்வரும் பொதுத் தேர்தலாகும்.

'''தமிழினத்திற்கு வாழ்வா? சாவா?'என்ற தீர்ப்பை வழங்கிடும் வாய்ப்பினைப் பெற்ற வாக்காளப் பெருமக்களே! தமிழினத்தின் விடுதலைக்கு இது ஒரு பொது மக்கள் வாக்கெடுப்பு என்பதைமனதில் கொண்டு, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை மறந்து. ஏற்றத் தாழ்வுகளை புறந்தள்ளி, கட்சிக் கட்டுப்பாடுகளை கடந்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழினத்தின் விடுதலையை வேண்டி நிற்கும் ''தமிழர் விடுதலைக் கூட்டணி'' வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென ஏழு கோடி தமிழ் மக்களின் சார்பாக வேண்டுகின்றோம்.

''வெளி நாடுகளில் வாழும் தமிழர்கள்தமிழின விடுதலைப் போராட்டத்தில் முழுமையாக பங்குகொண்டு தமதுபணியைச் செய்திட அணியாய் இருக்கிறார்கள் என்பதை தெரிவிப்பதில் மகிழ்கின்றோம்.'' (இ)

## சிவாஜிக்கு கருணாநிதி புகழாரம்

சென்னை, ஜூலை 12 நடிகர் திலகம் சிவாஜி கணேஷனை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் கலைஞர் மு. கருணாநிதி பாராட்டியுள்ளார்.

பேரறிஞர் அண்ணா எழுதிய 'நீதிதேவன் மயக்கம்' நாடகம் மீண்டும் காஞ்சிபுரத்தில் மேடையேற்றப்பட வேண்டும் என்று கழகப் பிரமுகர் ஒருவர் தம்மிடம் கேட்டுக் கொண்டது பற்றி பிரஸ்தாபித்து கலைஞர் 'முரசொலி' இதழில் உடன் பிறப்புக்கு எழுதியுள்ள கடிதத்தில் 'காஞ்சியில் நீதிதேவன் மயக்கம் என்றதும் எனக்கு எத்தனையோ பழைய நினைவுகள் எழுகின்றன. காஞ்சிக் கழகத் தாருடன் இணைந்து கழகக் கொள்கைப் பிரசாரத்திற்காகவும் கழக நிதிதிரட்டுவதற்காகவும் பல ஆண்டுகளுக்கு முன் தமிழகம் முழுவதும் நாடகங்கள் நடாத்தியதையும் அந்த நாடகங்களில் நண்பா சிவாஜி கணேஷன் எந்த ஊதியமும் தேவையில்லை என்று கூறி ஒத்துழைத்ததையும் மறந்து விடமுடியுமா?' என்று கலைஞர் குறிப்பிட்டுள்ளார். (கி-உ)

ஆயுர்வேத வைத்தியர்கள்

## 31-ம் திகதி வரை பதிவு செய்யலாம்

கொழும்பு, செவ்வாய் பாரம்பரிய ஆயுர்வேத வைத்தியர்கள் தம்மை ஆயுர்வேத திணைக்களத்தில் பதிவு செய்துகொள்வதற்கானகாலக்கெடு இம்மாதம் 31-ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

### மணிவாசக்கு

அகிம்சை பெருந்தொகையான மனிதருடைய நன்மைக்கென்று தொழிற்படுவதில்லை. அது எல்லாருடைய நன்மைக்குமாகத் தொழிற்படுகிறது. அகிம்சையை விரதமாய்க் கொண்ட ஒருவன், எல்லாருடைய நன்மையையும் பெறுவதற்குத் தேவை வரும்போது தன்னுடைய உயிரையும் விடுவதற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

—காந்தி மகான்

ஈழநாடு
THE EELANAADU

# தேர்தல் பிரசாரம்

பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரம் தான் இருக்கிறது. தேர்தல பிரசாரம் சூடுபிடித்து உச்சக் கட்டத்திற்கு வந்துகொண்டிருக்கிறது.

பத்தொன்பதாந் திகதியுடன் பிரசாரக் கூட்டங்கள் முடிவுக்கு வந்துவிடும். இப்போது பிரசாரக் கூட்டங்களில் பிரசாரப் பீரங்கிகள் ஒலி இரவு பத்துப்பத்தரை மணி வரை முழங்கித் தள்ளுகின்றன

தேர்தலில் போட்டியிடும் கட்சிகளும், சுயேச்சைகளும் தமக்கு வெற்றி நிச்சயம் என்ற உறுதியுடன் பிரசாரம் செய்துவருகின்றன.

பல இடங்களில் சில சம்பவங்கள் நிகழ்ந்துள்ள போதிலும் பொதுவாக இதுவரை அமைதி பேணப்பட்டிருக்கிறது.

வடபகுதியில் தினமும் நூற்றுக்கு மேற்பட்ட தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

சில இடங்களில் சிறுசிறு கல்வீச்சுச் சம்பவங்களும் வேறு சிறு நிகழ்ச்சிகளும் நடந்துள்ளபோதிலும் வடபகுதியில் பொதுவாக அமைதியானமுறையிலேயே தேர்தல் பிரசாரம் நடைபெறுகிறதென்று சொல்லவேண்டும்.

பொலிசாரின் உதவியை அதிகம் நாடவேண்டிய அவசியமில்லாமல் வேட்பாளர்களும் பொதுமக்களும் அமைதியைப் பேணிவருகின்றனர். இதற்காக அவர்களைப் பாராட்டவேண்டும்.

இதே அமைதியைத் தேர்தல் முடியும்வரை மட்டுமல்லாது தேர்தல் முடிந்தபின்னரும் பாதுகாக்கவேண்டும். வடபகுதிப் பொதுமக்களும் வேட்பாளர்களும் நாட்டின் இதர பகுதிகளுக்கு வழிகாட்டிகளாகவும் முன்மாதிரியாகவும் இருக்கவேண்டும்.

சமீபத்தில் இந்தியாவில் ஆட்சிமன்றத் தேர்தலும், மாநில சட்டசபைகளுக்கான தேர்தலும் நடைபெற்றன. வட இந்திய மாநிலங்கள் சிலவற்றில் வன்முறைச் சம்பவங்கள் சில நிகழ்ந்தபோதிலும், தமிழ்நாட்டில் மிக அமைதியான முறையில் தேர்தல் நடந்துமுடிந்தது. அதன் பின்னரும்கூட அமைதி பேணப்படுகிறது.

தமிழ்நாடு காட்டிய முன்மாதிரியை நாம் பின்பற்றுவது நல்லது.

தேர்தல் நெருங்க நெருங்கப் பிரசாரம் சூடுபிடித்து உச்சக் கட்டத்தை அடையும்போது உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவது சுலபம் அல்ல.

ஆனாலும் மேடையில் பேசுபவர்கள் மக்களின் உணர்ச்சியைக் கிளறிவிடக்கூடிய முறையிலோ ஆத்திரமூட்டக்கூடிய முறையிலோ பேசுவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

ஒரு வேட்பாளரின் பிரசாரக் கூட்டத்தில் பேசுபவர்கள் கூடியவரையில் தங்கள் கொள்கைகளையும், திட்டங்களையும் எடுத்துக் கூறி, வாக்காளர்களின் ஆதரவைத் திரட்டுவதே பண்பு. இதை விடுத்து எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர்களைப் பற்றியோ அவர்களின் ஆதரவாளர்களைப் பற்றியோ தனிப்பட்ட முறையிலும் அவர்களுடைய சொந்த வாழ்க்கை பற்றியும் பேசுவது பயனற்ற செயல் மட்டுமல்லாது அமைதியான தேர்தலுக்கு அது எந்தவகையிலும் உதவமாட்டாது.

கல் வீச்சுச் சம்பவங்களுக்கு மதுவும் ஒரு காரணமென்று சொல்லப்படுகிறது. தேர்தலையொட்டிச் சில தினங்களுக்கு மதுபான விற்பனை தடைசெய்யப்பட இருக்கிறது. இன்று முதலே மதுபானத்தைத் தடைசெய்தால்கூட நல்லதே!

இது ஜனநாயக நாடு. அதன் நல்ல பெயரைப் பாதுகாக்கவேண்டியது மக்கள் கடமை.

உள்ளூர் தேவைகளை

# மாவட்ட மந்திரிகள் நிறைவேற்றுவர்

கொழும்பு, செவ்.

''ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யப் பல அபிவிருத்தித் திட்டங்கள் அமுல்செய்யப்படும்''

கொலன்னாவையில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன மேற்கண்டவாறு கூறினார்.

திரு ஜெயவர்த்தன தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''கைலஞ்சம் மூலம் வேலை வழங்குவது முற்றாக ஒழிக்கப்படும். திறமையின் அடிப்படையிலேயே நாம் வேலை வழங்குவோம்.

''நாம் ஆட்சிக்கு வந்தபின் எங்கள் ஆட்சிக்காலம் முடிவதற்கு முன் தேர்தலை நடத்துவோம். ஆனால் சுதந்திரக் கட்சி ஆட்சி நடத்த 5 வருட அனுமதியைப் பெற்று 7 வருடம் ஆட்சி செலுத்தினர்கள்.

''நமது ஆட்சியில் மாவட்டத்திற்கு ஒரு மந்திரி நியமிக்கப்படுவார். அந்த மாவட்ட மந்திரிதான் மாவட்டத்தின் தேவைகளில் கவனம் செலுத்துவார். இதுதான் நமது புதிய நிர்வாகத் திட்டமாகும்'' என்றார் (கு)

# "தீவுப் பகுதிகள் முன்னேறவில்லையே"

— யோகேந்திரா

நெடுந்தீவு, செவ்.

'எமது தாய்நாடு முப்பது ஆண்டுகளுக்கு முன் சுதந்திரம் அடைந்தது. ஆனால் அக்காலத்திலிருந்து இன்றுவரை தேவையான அளவுக்கு நெடுந்தீவும், ஊர்காவற்றுறையிலடங்கிய ஏனைய தீவுகளும் பொருளாதார அபிவிருத்தித் துறைகளில் முன்னேற்றம் அடையவில்லை. இது வேதனைக்குரியது. இனத்தின் பேராலும் தொகுதியின் பேராலும் பாராளுமன்றம் சென்ற பிரதிநிதிகள் மீண்டும் ஒரு அணியாகத் தம்மை தெரிவு செய்ய கேட்கிறார்கள். கடைசியில் எஞ்சி இருக்கின்ற உரிமைகளை ஒவ்வொன்றாக நாம் இழந்து கொண்டே போகின்றோமே தவிர இழந்தவற்றை மீட்டெடுக்க எமது பிரதிநிதிகள் ஒரு சாதனையை கையாளவில்லை. 1965-ம ஆண்டு மாவட்டசபை பழுத்த கனியாக எமது கைக்கு எட்டியபோதும், வாய்க்கு எட்டவில்லை'

இவ்வாறு தமிழ் மக்கள் இயக்கத் தலைவரும் ஊர்காவற்றுறை தொகுதி வேட்பாளருமான திரு. யோ. துரைசுவாமி நெடுந்தீவில் தம்மை ஆதரித்து நடந்த கூட்டத்தில் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது 'நெடுந்தீவிற்கு குறிக்காட்டுவான் துறைமுகத்திலிருந்து புறப்படும் படகுகளில் பொதுவாக ஒருபடகு தான் வேலை செய்கின்ற நிலையில் இருக்கின்றது. அப்படகும் சில நாட்களில் நடுக்கடலில் நின்றுவிடுவதை நான் நேரடியாகக் கண்டுள்ளேன்.

'ஒரேஒரு பஸ் வண்டிதான் இம்முழுத்தீவிலும் சேவை செய்கின்றது, இது மிகவும் வேதனைக்குரியது அவ்வண்டி பழுதடைந்தால அதோகதி. தெருக்களோ சீர்கேடடைந்த நிலைமையில் இருக்கின்றன.

மேலும் தொகுதியில் தற்போது மருத்துவ வசதியின்மை தண்ணீர் பற்றுக் குறைவு மின்சார வசதியின்மை போதிய கல்வி வசதியின்மை ஆகியவற்றை நான் கண்டறிந்துள்ளேன்.

என்னைப் பிரதிநிதியாக தேர்ந்தெடுத்தாலோ, தேர்ந்தெடுக்கா விட்டாலோ இத்தீவை சீர்படுத்தி முன்னிலைக்குக் கொண்டு வர கண்ணும் கருத்துமாய் இருந்து உழைப்பேன் தொகுதியை மாத்திரம் கண்காணிப்பதோடு நில்லாமல், தமிழினத்தைப் பலப்படுத்தி இழந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்கும் அயராது உழைப்பேன்.

நெடுந்தீவு கிராமாட்சி மன்றத் தலைவர் திரு. அ. த. அம்பலம் கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

திருவாளர்கள்: அந்தோனிமுத்து தில்லைநாதன், நாவேந்தன், செல்லப்பா கார்த்திகேசு, இராமநாதன், பண்டிதர் பசுபதி, டாக்டர் குணரத்தினசிங்கம், திருமதி இம்மானுவேல் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

# "ஒற்றுமையை உலகறியச் செய்யும் தேர்தல் இது"

- யோகேஸ்வரன்

கிளிநொச்சி, செவ்.

'தமிழ் மக்கள் பெரும்பான்மையினரின் அடக்கியாளும் நிலைகண்டு இன்று சகல வேறுபாடுகளையும் மறந்து ஒன்று சேர்ந்துள்ளனர். அவர்களின் ஒற்றுமையை உலகறியச் செய்யப் போகும் தேர்தல் இது' என்று யாழ்ப்பாணத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. யோகேஸ்வரன் கிளிநொச்சி தொகுதி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திருவையாறு படித்த வாலிபர் திட்டத்தில் திரு. எஸ். இராஜேஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில், 'வடக்கில் இன்று கூட்டணியை எதிர்த்துப் போட்டியிடும் சுயேச்சைவாதிகளிடம் கொள்கை எதுவும்கிடையாது. கொள்கைஅடிபடையில் போட்டியிடும் கூட்டணிக்கு இத்தேர்தலில் பேராதரவு கிடைக்கும் என்பது திண்மை' என்றார்.

திருவாளர்கள் இ. கிருஷ்ணராஜா, ஐ திருஞானம், கே. தர்மலிங்கம் உட்பட மற்றும் பலரும் பேசினர். (கூ)

# பிரசவத்துக்கு அனுப்பப்பட்ட பெண்ணின் சடலம்

கொழும்பு, செவ்வாய்

ஆஸ்பத்திரியில் இறந்து போன பெண் நோயாளி ஒருவரை பிரசவ அறைக்கு அனுப்பியதையிட்டு, கொழும்பு பிரிவு ஆஸ்பத்திரிக் கமிட்டி விளக்கம் கோரியுள்ளது.

இச்சம்பவம் டி. சொய்சா பிரசவ ஆஸ்பத்திரியில் நடந்துள்ளதாக ஆஸ்பத்திரிக் கமிட்டிக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்தாரிக்கு 6 மணிக்கு பின்னரும் நோயாளிகளை அனுமதிப்பதற்கு அனுபவம் அற்ற மருத்துவ தாதி ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இப்பிரச்னைகளைத் தீர்க்க மருத்துவ தாதிக்குப் பதில், டாக்டர் ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்றும் கமிட்டியில் தெரிவிக்கப்பட்டது.

# 13,500 ரூ. செத்தல்மிளகாய் பிடிபட்டது

கொழும்பு, செவ்வாய்

பதுக்கிவைக்கப்பட்டிருந்த 13,500 ரூத்தல் செத்தல் மிளகாயை, கொழும்பு புறக்கோட்டையிலுள்ள வர்த்தக நிலையங்களில், விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள்கைப்பற்றினார்கள்.

கடந்த சிலவாரங்களாக வெளிச்சந்தையில் மிளகாயின் விலை திடீரென அதிகரித்ததைத் தொடர்ந்தே இத்திடீர் சோதனை நடைபெற்றது.

3 வாரத்திற்குமுன் ரூத்தல் 6 ரூபாவாக விற்ற செத்தல் மிளகாயின் விலை தற்போது ரூத்தல் 18 ரூபாவாக அதிகரித்துள்ளது.

இயற்கைத் தட்டுப்பாடு ஏற்படுத்துவதற்காக மிளகாய் பெருமளவில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் நம்புகின்றனர். (க-இ)

# ஐயாறன் எழுதுவது

தமிழகத்தில் ஒரு சினிமா நடிகர் முதலமைச்சர் ஆகி இருக்கிறரே, அவர் ஆட்சியை எப்படி நடத்தப்போகிறார்? வேடிக்கை பார்க்கலாம் என்று ஆங்கிலம் படித்த சிலர் இங்கு பேசிக்கொள்வதைப் பற்றிக் கேள்விப்பட்டேன்.

முதலமைச்சர் எம். ஜி. ஆர். பதவி ஏற்ற முதல் வாரத்திலேயே காவிரி ஆற்றில் நீர் விடும்படி கர்னாடக அரசுடன் பேசி முதல் வெற்றி பெற்றுள்ளது பாராட்டத்தக்கதுடன், சினிமா நடிகரைப்பற்றி சில வட்டாரங்களில் நிலவிய சந்தேகத்தையும் நீக்கக்கூடியதாக இருக்கும்.

ஒருவர் எந்தத் தொழில் செய்தாலென்ன? சினிமா நடிகராக இருந்தாலும் அவர் ஆட்சியைத் திறம்பட நடத்த முடியுமென்பதை அறிந்து தான் தமிழக மக்கள், ஆட்சிப் பொறுப்பை எம். ஜி. ஆரிடம் ஒப்படைத்தனர். அவர்களது நம்பிக்கை வீண் போகவில்லை என்பதை அவரது முதல் வெற்றி காட்டியுள்ளது.

எம். ஜி. ஆருக்கும் கருணாநிதிக்கும் வாக்குவாதங்கள் சபையில் தினசரி ஏற்பட்டு வருவதால் சபை விவாதங்கள் கலகலப்பாக இருப்பதுடன், ஆட்சியாளர்களும் அதிக கவனமாக இருப்பர். இதனால் ஊழல்களும் தவறுகளும் குறைந்து, ஆட்சி செம்மையாகி மக்களும் நன்மையடைய வழி பிறக்கும்.

ஃ ஃ ஃ

தமிழகத்தில் கல்லூரிகளிலே மாணவர்களைச் சேர்ப்பதற்கு பணம் வாங்கும் வழக்கத்தை கவர்னர் பிரபு தாஸ் பட்வாரி கண்டித்து, அந்த முறை ஒழிக்கப்பட்டதை வரவேற்றுள்ளாராம். மாணவரின் வாழ்க்கையே, லஞ்சம் கொடுப்பதில் ஆரம்பமானால், கல்லூரியில் சேரும்போதே அவர் மனதில் இந்த எண்ணங்கள் புகுந்தால், எதிர்காலத்தில் அவர்கள் வாழ்க்கையும் பாதிக்கப்படுமென்பதில் ஐயமில்லை. கவர்னர் கூறியதுபோல், முளையிலேயே இது ஒழிக்கப்படுவது அவசியமாகும்.

ஈழத்திலே அரசாங்க கல்வி ஸ்தாபனங்களில் இந்த வழக்கம் வெகுவாக இல்லை, ஆனால் சில தனிப்பட்ட கல்லூரிகளில் மாணவ மாணவிகளைச் சேர்க்க பெருந்தொகைகள் வாங்கப்படுவது பகிரங்க ரகசியம். இதற்கு இடமில்லாமல் அரசாங்கம் ஏதும் செய்ய முடியாதா?

ஃ ஃ ஃ

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் ஒரு பெரிய ''வேதக் காட்சிச் சாலையை''க் கட்டப் பண உதவிசெய்ய ஓர் அமெரிக்கச் செல்வந்தர் முன்வந்துள்ளார்.

'ஹரே கிருஷ்ண' இயக்கத் தலைவரான ஆசார்ய சுவாமி பிரபு பாதாவுக்கு அச்செல்வந்தர் எழுதிய ஒரு கடிதத்தில், ''இதை என் வாழ்க்கைத் தொண்டாகச் செய்ய விரும்புகிறேன். இது பெரும் வெற்றி பெற லட்சக்கணக்கான டாலர்களை அளிக்கத் தயாராக இருக்கிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். வாஷிங்டனிலே அந்த ஸ்தாபனத்திலே ஸ்ரீமத் பாகவதம், பகவத்கீதை முதலியவற்றில் உள்ள தத்துவக் கதைகள், முக்கிய விஷயங்கள் எல்லாம் அடங்கியிருக்குமாம். அமெரிக்கருக்கு இந்து சமயத்தில் அதிக ஆர்வம் ஏற்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

## "அண்ணா வழியில்

# புதிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியவர் செல்வா"

யாழ்ப்பாணம். புதன் "உடல் பொருள் ஆவியை அர்ப்பணித்து தாயகம் காத்திட தமிழ் இளைஞர் தயாராக உள்ள இன்றைய நிலையில் வரும் தேர்தல் தமிழ் மக்களின் தீர்ப்பாக அமைய இருக்கிறது. எனவே தமிழ் மக்கள் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும்" இவ்வாறு குருநகர்த் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. கிறிஸ்ரியன் நரியன் குண்டு மைதானத்தில் வெற்றிவேலு யோகேஸ்வரனை ஆதரித்து நிகழ்ந்த கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.


திரு. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றஇக்கூடத்திற்கு மிகச் சிறப்பான முறையில் மேடை அமைக்கப்பட்டிருந்தது நான்கு சித்திரவேலைப் பாடமைந்த வெண்ணிறத் தூண்கள் தாங்கிய உதயசூரியன் சின்னங்கள் பொறிக்கப்பட்ட மேடையில் மலர்க்குகை ஒன்று அமைக்கப்பட்டு பல வர்ண நிற விளக்குகள் அதில் பொருத்தப்பட்டு அம் மலர்க்குகையுள் நின்றே பேச்சாளர்கள் பேசினர். அருகினில் மிகப் பிரமாண்டமான சிகரம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது.

திரு. கிறிஸ்ரியன் தொடர்ந்து பேசுகையில், "இந்தி என்றால்மந்தி என்றும் அதைத் திணித்தால் தமிழர் உடலெல்லாம் செந்தீயாக மாறுமென்றும் அண்ணா கூறி, முழு ஒற்றுமைப்பலத்துடன் தமிழகத்திலே புதியதோர் அரசியல் விழிப்புணர்ச்சியைத் தூண்டினார். அவ்வாறே இலங்கையில் தத்தை செல்வா ஏற்படுத்திய அரசியல் விழிப்புணர்வு இன்று புதியதோர் அரசியல் புத்துணர்வை—விடுதலை வேட்கையைத் தூண்டியுள்ளது. இந்நிலையில் விடுதலைப் பாசறையின் வழிவந்த திரு. யோகேஸ்வரன் போன்ற 24 விடுதலைக் கூட்டணி அபேட்சகர்களும் தான் தமிழினத்தின் பிரதிநிதிகளாக வரத்தகுதியுடையவர்கள்" என்றார்.

நல்லூர் தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு கிருஷ்ணசாமி பேசுகையில் கூறியதாவது: "நாகரிகமற்று இருந்த நாடுகள் எல்லாம் இன்று சுதந்திரத்துடன் வாழ்கையில் நாகரிகம் அடைந்த இனமான தமிழ் இனம்மட்டும் ஏன் சுதந்திர நாடமைக்கக் கூடாது? ரஷ்யாவில் அலெக்சாந்தர், மக்கள் புரட்சியில் ஈடுபட்டு முடிமன்னனால் சுட்டு வீழ்த்தப்பட்ட சம்பவமே அலெக்சாந்தரின் இளைய சகோதரனாகிய லெனினைப் புரட்சிவாதியாக மாற்றியது. அது போன்று இன்றைய இளைஞர்கள் படும்வேதனைகள். நாளைய இனத்தை புரட்சிகள் சமைத்து புதுத்தமிழ்ஈழம் அமைத்திடச் செய்திடும். நாமும் லெனின் கோட்பாட்டின்படி தனிக்கலை கலாச்சாரம் படைத்த ஒரு தேசிய இனம்தான். நமக்கும் பிரிந்துவாழும் உரிமை உண்டு; அந்த உரிமையைப் பயன்படுத்திப்பூரண இறைமைஉள்ள தன்னாதிக்க தமிழ்ஈழக்குடியரசு அமைத்திடபுறப்பட்ட தமிழ்த் தலைவர்களின் பேரணியாம் தமிழர் விடுதலைக் கூட்டணி வெற்றிபெற்றிட உழைப்போம்'

முன்னாள்மாநகரசபை உதவி மேயர் திரு. கே. வி. தெய்வேந்திரம் பேசுகையில்; 'இம் மேடையிலே அமர்ந்திருக்கும் திரு. அந்தோனிப்பிள்ளை: திரு. தம்பு கந்தையா, திரு. மகாதேவா போன்றவர்கள் மாநகர சபையில் எதிரணியில் அமர்ந்து என்னுடன் பல வாக்குவாதங்களை நிகழ்த்தியவர்கள். ஆனால் இன்று தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற இலட்சிய அணியின்கீழ் நாமெல்லாம் ஒன்றுபட்டு நிற்கின்றோம். இவ்ஒற்றுமையே தமிழர் விடுதலைக் கூட்டணி ஈட்டிய பெரு வெற்றி' என்றார்.

இக்கூட்டத்தில் வேட்பாளர்கள் திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், வெ. யோகேஸ்வரன் தமிழ்க்காங்கிரஸைச் சேர்ந்த க.சிவதாசன், முன்னாள் மாநகர முதல்வர் திரு. எஸ். மகாதேவா உட்படப் பலர் பேசினர். (கி-அ)



வேலர்: என்ன மயிலர் முகத்திலை கவலை!?

மயிலர்: மனிசி சொல்லுற இரகசியங்களொண்டும் இப்ப எனக்குத் தெளிவாக கேட்பதில்லை.

வேலர்: ஏன் என்ன நடந்தது!

மயிலர்; தேர்தல்பேச்சுகள் ஒலிபெருக்கியில் கேட்டு இப்ப மெதுவாகப் பேசுவதொண்டும் கேட்குதில்லை!

மணியர்: அப்ப வீட்டில் ஒலிபெருக்கி ஒண்டு பூட்டி அதில் மனிசியை இரகசியத்தைப் பேச வைத்துக் கேள்.

சுந்தர்

# சமதர்ம சோஷலிஸத்தை உருவாக்கியே தீருவோம்"

— மு. சிவசிதம்பரம்

யாழ்ப்பாணம், புதன் "இந்த நாட்டில் சாதி,சமய பேதமற்ற சமதர்ம சோஷலிச சமுதாயத்தை நாம் உருவாக்கியே தீருவோம் அதுவரை எமது போராட்டம் தீராது"

இவ்வாறு நல்லூர் மூத்த விநாயகர் வீதியில் தம்மை ஆதரித்து திரு. பரராஜசேகரம் தலைமையில் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழர் விடுதலைக் கூட்டணி நல்லூர் தொகுதி வேட்பாளர் திரு மு. சிவசிதம்பரம் கூறினார். அவர் தொடர்ந்து தமதுரையில்:

"கடந்த சில தினங்களாக நல்லூர்த் தொகுதியின் பல்வேறு கூட்டங்களுக்கும் செல்கின்ற பேறு எனக்குக்கிடைத்தது. அப்பொழுதெல்லாம் இந்தத் தொகுதி மக்கள் என் மீது காட்டுகின்ற அன்பும் ஆதரவும் என்னை மெய்மறக்கச் செய்கிறது அதிலும் இளைஞர்கள் என்மீதுகாட்டுகின்ற அன்பு என்னைத் திக்குமுக்காட வைக்கிறது. இவை எல்லாம் ஒரு தனிப்பட்ட சிவசிதம்பரத்திற்குக் காட்டப்படுகிற அன்போ ஆதரவோ அல்ல என்பதையும் நான் சார்ந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையும் விசுவாசமுமே இதன்காரணமென்பதையும் நான் அறிவேன். தமிழர் விடுதலைக் கூட்டணி ஒன்று தான் தேர்தலுக்கு முன்னும், பின்னும் தமிழினத்திற்காகப் போராடிவரும் ஒரு இயக்கமாகும். இந்தநாட்டில் தமக்கெனத் தனியான சில கொள்கைகளை முன்வைத்துத் தமிழினத்திற்குப் பணியாற்றி வந்துள்ள தமிழரசும்-தமிழ்க் காங்கிரசும் தமிழினம் இன்றுள்ள நிலையில் நம்முள் இனியும் பிளவு இருப்பின் தமிழன் தமிழனாகத் தலைநிமிர்ந்து வாழ முடியுதென்பதை உணர்ந்து வேற்றுமைகளை எல்லாம் மறந்து ஓரணியாகக் கூட்டணியாக இணைந்துள்ளது இழந்த தமிழ ஈழத்தின் உரிமைகள் மீண்டும் கிடைப்பதற்கு ஒரு நம்பிக்கையான சகுனமாக அமைந்துள்ளது"

அவரைத் தொடர்ந்து உரையாற்றிய செல்வி த. நிர்மலா தேவி பேசுகையில்:

"இழந்த தமிழ் மண்ணை மீண்டும் பெற்றுக்கொள்ளத் தமிழ் பெண்களாகிய நாம் தனி ஈழம் அமைக்கப்போராடுகின்றவர்களுடன் ஒன்றிணைந்து போராடவேண்டும். பண்டைய வீரவரலாறு படைத்த தமிழ்ப் பெண்களைப்போன்று நாமும் வீரவரலாறு படைக்க முன்வரவேண்டும். பண்டார வன்னியனிடமிருந்து நமது தமிழ் மண்பறிக்கப்பட்டதுடன் நமது சுதந்திரமும், சுபிட்சமும் பறிபோனது. அதுவரை இரு தனிநாடுகளாக இருந்து வந்த ஈழம் ஆங்கிலேயருடைய ஆட்சியில் ஒன்றிணைக்கப்பட்டன. எனவே நாம் இழந்த மண்ணைப்பெறப் போராட வேண்டியதவசியம்" என்றார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசியதாவது:

### தமிழன் சிலையாகவும் வாழ முடியாதநிலை

"தனித்தனிக் கட்சிகளாகப் பிரிந்திருந்த கட்சிகளும் இனங்களும் கூட இன்று ஒன்றிணைந்து விட்டன இங்கு தமிழ் மொழியைப் பேசுகின்ற முஸ்லீம் இனத்தவர்கள் இன்று எம்மோடிணைந்துவிட்டனர். இந்த நாட்டில் தமிழர்களதும் முஸ்லீம்களதும் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டதே இதற்குக்காரணமாகும். தமிழாராய்ச்சி மகா நாட்டின்போது தமிழின் பெருமைகளைப்பற்றிக் கேட்டுக் கொண்டிருந்த அப்பாவிமக்கள் மீது காட்டுமிராண்டித்தனமாகத் தாக்குதலை பொலிஸார் நடாத்தியதனால் அநியாயமாக ஒன்பது உயிர்கள் பறிக்கப்பட்டதும், புத்தளத்தில் ஏழு முஸ்லீம் இளைஞர்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டதற்கும் இந்தஅரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது. தமிழாராய்ச்சி மகாநாட்டில் உயிர் இழந்தவர்களுக்காக யாழ்ப்பாணத்தில் எழுப்பப்பட்டிருந்த நினைவுநடுகல்லைக் கூட வாகனங்களால் தகர்த்தெறிந்து இந்தநாட்டில் தமிழன் சிலையாகத்தானும் வாழும் தகுதியற்றவன் என்று கூறியதுஇந்த அரசாங்கமாகும். எமக்கென்றொரு தாயகம் இல்லாதிருப்பதே இந்தநாட்டில் ஆண்டதமிழினம் இன்று அடிமையினமாகக் அல்லற்படக்காரணமாகும். இந்த நிலையை உணர்ந்துதான் தமிழ் பெருந் தலைவர்களான அமரர் திரு.செல்வநாயகம், அமரர் திரு ஜி.ஜி.பொன்னம்பலம் போன்ற தலைவர்கள் ஒரு கொடிக்கீழ் ஒன்றிணைந்து தமிழர்விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார்கள்."

திரு. ஆ. குணராசா, வண. சர்வானந்தா, பரநிருபசிங்கம், ரவீந்திரன், சட்டத்தரணி சற்குணநாதன் ஆகியோரும் பேசினர். (கா-அ)

# "உலகத்தமிழர் ஆவலை தூண்டியுள்ள தேர்தல்இது"

காரைநகர், செவ் "இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் அடக்கியொடுக்கப்பட்ட நிலையிலிருந்து விடுபட்டு "தமிழ் ஈழம்" அமைத்துசுதந்திரபுருஷர்களாக வாழ்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியை நூற்றுக்குநூறுவீதம் முழுமனதுடன் ஆதரிக்கிறார்களா? என்பதை உலகின் பல பாகங்களிலும் பரந்துவாழும் தமிழர்கள் அறிந்து கொள்ள ஆர்வம் மிகக்கொண்டவர்களாக இருக்கிறார்கள்"

இவ்வாறு சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு வட்டுக்கோட்டைத் தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசுவை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்,

அராலி கொட்டைக்காட்டில் இக்கூட்டம் நடைபெற்றது. (உ)

# அனுரா, தாயாருக்குமீண்டும் சந்தர்ப்பம் கோருகிறாராம்

### நுவரெலியாவில் காமினி.

குண்டசாலை செவ். நுவரெலியாப்பகுதியிலும் சுற்றுப்புறத்திலுமுள்ள தோட்டத் தொழிலாளர்கள், தங்களுக்கு முன்பு சில கரைச்சல் இருந்துள்ளதாகக் கூறுகின்றனர். அனுரா பண்டாரநாயக்கா வந்தபின் தங்களுக்குப் பெரிய கரைச்சல் ஏற்பட்டு விட்டதாக இன்று கூறுகின்றார்கள்.

நுவரெலியா, மஸ்கேலியா தொகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய ஐ. தே. க. அபேட்சகர் திரு. காமினி திஸநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. திஸநாயக்கா மேலும் கூறியதாவது;- திரு. அனுரா பண்டாரநாயக்கா தமது தாயார் மீண்டும் ஒரு தடவை பிரதமராகவர சந்தர்ப்பம் அளிக்குமாறு வேண்டுகோள் விடுத்துவருகிறார். இதில் மக்கள் ஏமாறமாட்டார்கள். (க-இ)

# இ. பா. தமிழர் வளர்ச்சிக்கு பொருளாதாரமே காரணம்

—குணரத்தினம்

அரியாலை, செவ்வாய் "எமக்கும் எமது தாய் மொழிக்காகப் போராடும் உரிமை உண்டு. இந்த உரிமை தனிப்பட்ட சிலருக்கு மட்டும் உரியதல்ல" என்று நல்லூர் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு.கே.இராமநாதன் தம்மை ஆதரித்து கலட்டி கலைவாணி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் "கூட்டணித் தலைவர் திரு. தொண்டமான் தனது கட்சியின் சேவல் சின்னத்துடனும் திரு. காசி ஆனந்தன் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துடனும் போட்டியிடமுடியுமாயின் நாமும் ஏன் ஒரு சின்னத்தில் போட்டியிட முடியாது?" என்றார்.

திரு. இ. குணரத்தினம் பேசுகையில் கூறியதாவது:

"தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி தேர்தல் காலங்களில் பேசுபவர்கள், தாம் தான் சிறுபான்மைஇனத்தின் உயர்ச்சிக்குக் காரணமெனப் பேசுகின்றனர். சிறுபான்மை தமிழரின் இன்றைய காலகட்ட வளர்ச்சிக்கு தேசிய ரீதியாக ஏற்பட்ட அரசியல் சமூக பொருளாதார மாற்றங்களே காரணமாக அமைந்துள்ளன.

"1931ல் ஏற்படுத்தப்பட்ட சர்வஜன வாக்குரிமைச் சட்டத்தால் தேர்தலில் போட்டியிடுபவர்கள் சிறுபான்மைத் தமிழரை நாடிப்போக வேண்டி ஏற்பட்டது. 1945ல் ஏற்படுத்தப்பட்ட இலவச கல்வி முறை இம் மக்களின் அறியாமையை அகற்றி சமூக அந்தஸ்தை ஓரளவு உயர்த்தியது 1957ல் கௌரவ எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட கிராமசேவையாளர் முறை சிறுபான்மை மக்கள் நசுக்கப்படுவதை ஓரளவு தணித்தது.

1957ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட சமூகக் குறைபாட்டு ஒழிப்புச் சட்டத்தின காரணகர்த்தாக்கள் தாம் எனக் கூறுபவர்கள் இச் சட்டம் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பெரிதும் பேணிப் பாதுகாக்கக் கூடிய சட்டம் இதுவல்ல என்பதை இன்னும் உணரவில்லை". (ஈ)

# வாக்காளருக்கு ஜி.ஜி (குமார்) கடிதம்

யாழ்ப்பாணம், புதன் "தமிழ்பேசும் மக்கள்அனைவருக்கும் பொதுப்படையான பிரச்னைகளைப் பொறுத்தளவில் தொகுதி மக்களின் அபிப்பிராயங்களைப் பெற்று செயலாற்றுவேன். ஒரு சுயேச்சை வேட்பாளர் என்றபடியால் எனது முதற் கவனம் யாழ். தொகுதி பற்றியதேயாகும். இத் தொகுதியில் பொருளாதார அபிவிருத்தியும் தொகுதி வாழ் மக்களின் முன்னேற்றமும் தான் எனது முக்கிய குறிக்கோளாகும்".

யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளருக்கு தனித்தனியாக அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு கூறியுள்

(7-ம் பக்கம் பார்க்க)

# "டாக்டர் ஏபிரகாம் ஒரு தமிழபிமானி"

யாழ்ப்பாணம், புதன்
''சிங்களப் பரீட்சையை ஒருக்காலும் எடுக்காமல் தமது அரசாங்க வைத்திய பதவியைத் துறந்தவர் டாக்டர் ஏ.எல்.ஏபிரகாம்; அவரது தமிழ்ப் பற்றுக்கு இது ஓர் உதாரணமாகும்''

இவ்வாறு யாழ்ப்பாணம் தொகுதி சுயேச்சை வேட்பாளர் டாக்டர் ஏ.எல். ஏபிரகாமுக்கு ஆதரவாக நரிக்குண்டு மைதானத்தில் திரு பொ.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் திரு.எஸ்.தங்கராஜா பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் ''தமிழர் கூட்டணியினரின் சர்வசனவாக்கெடுப்பென்பது எந்தச் சுயசிந்தனையாளனாலும் ஏற்றுக்கொள்ள முடியாதது என்றார்.

தாம் யாழ். தொகுதி அபேட்சகனுகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் இத்தொகுதியை முன்னேற்றுவதற்கு அநேக திட்டங்கள் வைத்திருப்பதாகவும், தொகுதி வாழ் மக்களின் தேவைகளை உள்ளூர் வாசியாகிய தாம் மற்றவர்களிலும் பார்க்க அதிகம் தெரிந்திருப்பதாகவும், யாழ்.தொகுதி எம்.பி.யாழ்ப்பாணம் வருவது செய்தியாயிருந்து வருவது தவிர்க்கப்பட வேண்டுமென்றும் டாக்டர் ஏபிரகாம் கூறினார். (கூ)

# "தமிழர் தனித்துவம் காப்பதை ஆட்சியாளர் விரும்பவில்லை"

-- வி. தர்மலிங்கம்

கிளிநொச்சி, செவ்வாய்
''தென்னிலங்கை அரசியல் கட்சிகள் ஆட்சிபீடத்தில் இருந்தபோது நாம் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாமலில்லை. ஆனால் அவர்கள் நாம் தனித்துவத்துடன் வாழ இணங்கவில்லை'' என்று கிளிநொச்சித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. வி. ஆனந்தசங்கரியை ஆதரித்து பளை சந்தை மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மானிப்பாய்த் தொகுதி வேட்பாளர் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறினார்.

திரு. இரா. நாகேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், ''வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களின் நிலை பற்றி அறிவதில் உலகநாடுகள் ஆர்வம் கொண்டுள்ள இவ்வேளையில் கூட்டணி வேட்பாளர் பலமான ஆதரவுடன் தெரிவு செய்யவேண்டியது ஒவ்வொரு தமிழனினதும் கடமையாகும். எதிர்காலத்தில் தமிழன் அற்ப சலுகைகளை எதிர்பார்க்காமல் தன்மானத்துடன் தலை நிமிர்ந்து வாழவே விரும்புகிறான் என்பதனை சகலருக்கும் உணர்த்தப்போகும் அதிமுக்கிய தேர்தல் இது''என்றார்

திருவாளர்கள் ஆலாலசுந்தரம், ஜெயபாலன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

# நமது பொருளாதாரவளம் பிரிவினைக்குச்சாத்தியமில்லை

- முன்னாள் வட்டு. எம். பி.

சித்தன்கேணி, செவ்வாய்
''சிங்களச் சகோதரர்களில் முற்போக்குக் கொள்கையுடையவர்களின் ஆதரவுடனேயே தமிழ்பேசும் மக்கள், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் சுயநிர்ணயத்துடனும், சுபிட்சமாகவும் வாழமுடியும். இலங்கையில உள்ள 35 லட்சம் தமிழர்களில் 13 லட்சம் தமிழர்களே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கிறார்கள். மிகுதி 22 லட்சம் தமிழரும் ஏனைய 7 மாகாணங்களில் செறிந்து வாழ்கிறார்கள். நமது பொருளாதார வளம், நாம் தனித்து வாழ்வதற்கு இடம் கொடாது. பிரதேச சுயாட்சி மூலம் தான் நாம் நமது உரிமைகளை நிலை நாட்டவும், பொருளாதார வளத்தை மேம்படுத்தவும் முடியும்.''

வட்டுப்-பிளவத்தையில் திரு. செல்லத்துரையின் இல்லத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசுகையில் வட்டுக்கோட்டைச் சுயேச்சை வேட்பாளர் திரு. ஆ. தியாகராசா மேற்கண்டவாறு குறிப்பிட்டார். கருத்தரங்கிற்கு திரு இ. பேரம்பலம் தலைமைவகித்தார்.

திரு தியாகராசா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''கடந்த 30 வருடங்களாகப் பின்தங்கியிருந்த வட்டுக்கோட்டைத் தொகுதி மக்களின் கல்வி வசதியின்மை, வசதியற்றோர் குடியிருப்புப் பிரச்னை, கடற்றொழிலாளர்கள் கஷ்டங்கள், குடிநீர்ப் பிரச்னை, ஆஸ்பத்திரி வசதியின்மை, மின்சார வசதியின்மை, வேலைவாய்ப்பின்மை ஆகியவற்றை நீக்கி, தொகுதி முழுவதும் பரவலாகப் பாகுபாடின்றிச் செயலாற்றியுள்ளேன். மற்றும் தேசிய அரசுப் பேரவையில் தரப்படுத்தலுக்கு எதிராகவும், தொழில் நுட்ப ஊழியர் சிற்றூழியர்களுக்குச் சிங்களத் தேர்ச்சியிலிருந்தும் விலக்களிப்பதற்கும், நீதிமன்றங்களில் தமிழ்மொழி உபயோகத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பல்கலைக்கழக வளாகம் அமைப்பதற்கும் குறிப்பாக வட்டுக்கோட்டையில் பல்கலைக்கழக வளாகத்தின் ஒரு பகுதி அமைவதற்கும் பாடுபட்டேன். கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் கொடுத்த வாக்குறுதிகளை ஓரளவு நடைமுறைப்படுத்தியுள்ளேன். மிகுதியானவைகளைச் செய்து மேலும் தொகுதியை முன்னேற்றுவதற்கு இம்முறையும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால் நிறைவேற்றுவேன்'' என்றார்.

திரு. ந. யோகநாதன் நன்றி தெரிவித்துப் பேசினார். (அ)

# "ஆள விரும்புவது பிறப்புரிமை"

—துரைராஜசிங்கம்

யாழ்ப்பாணம், புதன்
''தமிழன் தன்னைத்தான் ஆளவேண்டும் என்பது அவனது பிறப்புரிமை'' என்று முன்னாள் யாழ். உதவிமேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் ஊர்காவற்றுறைத் தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு கா. பொ.இரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

நெடுந்தீவுகிராமசபைமண்டபத்தில் திரு. க. சதாசிவம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது திரு துரைராஜசிங்கம் மேலும் பேசுகையில்,

''இத்தேர்தல் தனிநபர் நலனை ஆதரிக்கும் ஒன்றல்ல, இனவிடுதலைக்குக் களம் அமைக்கும் மிக முக்கிய தேர்தல் இது'' என்றார்.

வண்ணை ஆனந்தன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (கெ-உ)

# தமிழின ஒற்றுமைக்காக இணைந்ததாகக்கூறினார்ஜி.ஜி

## வண்ணார்பண்ணையில் 'சிவா' உரை

யாழ்ப்பாணம், புதன்
''அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழர்விடுதலைக் கூட்டணியை ஆதரிக்கவில்லை என்று சிலர் பிரசாரம் செய்வதில் அர்த்தமில்லை'' என்று நல்லூர் தொகுதி த. வி. கூட்டணி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரம் வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. க. விஷ்ணுகாந்தன் இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். திரு. மு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில் ''அமரர் ஜி. ஜி. தாம் இறப்பதற்கு சில தினங்களுக்கு முன் விடுத்த அறிக்கையில் நானும் செல்வநாயகமும் தமிழ் மக்களைப் பிரித்து வைத்திருந்தும் தமிழ்மக்களை ஒற்றுமைப் படுத்துவதற்கே நாமிருவரும் ஒரு அணியில் இன்று இணைந்துள்ளோம் என்று கூறியுள்ளார். நாமிருவரும் ஒரு அணியில் நிற்காவிடின் தமிழினம் ஒற்றுமையுடன் இருக்காது என்றும் அமரர் ஜி.ஜி. கூறியிருந்தார்'' என்றார்.

திரு. ஆ. துரைராஜசிங்கம், குணராஜா உட்பட மற்றும் பலரும் பேசினர். (கு-உ)

# "சந்திரகாசன்பற்றிவழக்குத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது"

## மானநஷ்ட வழக்கு பற்றி குமார்

யாழ்ப்பாணம், புதன்
''திரு. சந்திரகாசன் அண்மையில் நடந்த ஒரு கூட்டத்தில் என்மீது மானநஷ்ட வழக்குப் போடுவதாகப் பேசியுள்ளார். அதற்குமுன் அந்த வழக்குத் தீர்ப்பைப் பார்ப்போம்; மன்னார் பெரியகடை எஸ். சிவலிங்கம் என்ற வாதிக்கும், எம். எஸ். அப்துல் காதர், எஸ். ஏ. சி. முகமட் அபூபக்கர் ஆகிய பிரதிவாதிகளுக்கும் இடையிலான கொழும்பு நீதிமன்றம். சி/570/ கியூ இலக்க வழக்கில்தான் உதவி மாவட்ட நீதிபதி திரு. பேட்ரும் சேனரட்ண 1975 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ம் திகதி அளித்த தீர்ப்பில் திரு. சந்திரகாசனைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.''

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி சுயேச்சை வேட்பாளரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணித் தலைவருமாகிய திரு ஜி. ஜி. பொன்னம்பலம் குறிப்பிட்டார்.

பாண்டியன் தாழ்வில் நடந்த இக்கூட்டத்திற்குத் திரு. செல்லையா பரமானந்தம் தலைமை தாங்கினார்.

அவர் மேலும் பேசுகையில், ''இந்த வழக்கின் 'போட்டோஸ்ரட்' பிரதி என்னிடம் உண்டு. வேண்டியவர்கள் வந்து பார்க்கலாம். வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி வேட்பாளரிடமும் ஒரு பிரதி இருக்கின்றது. என்னிடம் பார்க்க விரும்பாதவர்கள் அவரிடம் போய்ப்பார்க்கலாம். இந்த வழக்குத் தீர்ப்பில் திரு. சந்திரகாசனுக்குப் பாதகமான அம்சங்களை அகற்றுவதற்காக ஓர் அன்பர்மூலம் சுப்ரீம்கோர்ட்டுக்கும் போனார். அதன் தீர்ப்பையும் திரு. சந்திரகாசனிடம் பார்க்கலாம்.

''நான் பேசியதை அக்கூட்டத்திலிருந்து கேட்டிருந்தால் திரு. சந்திரகாசன் இப்படிப் பேசியிருக்கமாட்டார். அவருக்கு யாரோ பிழையான தகவல்களைக் கொடுத்துள்ளதால் தான் அவர் இப்படிக் கதைத்துள்ளார்.

''11-7-77 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த திரு. அ. அமிர்தலிங்கத்தின் அறிக்கையில், 'இப்பொதுத் தேர்தலைச் சுதந்திர சமதர்ம ஈழத்தைப் பெறும் வாக்கெடுப்பாகக் கருதவுள்ளது' என்று உள்ளது அதாவது எனது கருத்தின் பின்பு கூட்டணி எடுத்த தீர்மானத்தின் பிரதிபலிப்பு இது.

[7-ம் பக்கம் பார்க்க]

# "ஆட்சிமன்றம் செல்வது ஆடம்பரத்துக்கு அல்ல"

- வி. குமாரசாமி

கொடிகாமம், செவ்
''ஆட்சிமன்றம் செல்வது மக்களுக்கு சேவை செய்வதற்காக என்று இருக்கவேண்டும். ஆடம்பரவாழ்வு வாழ்வதற்காக என்று இருக்கக்கூடாது'' என்று சாவகச்சேரித் தொகுதியில் ஜி. ஜி. காங்கரஸ் சார்பில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் திரு. வி குமாரசாமி கூறினார்.

மட்டுவில் வடக்கு சிவன் கோவிலுக்கு அருகாமையில் திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் தம்மை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில்அவர் மேலும் பேசுகையில், ''எனது பொருளாதாரத்திட்டம் இரணைமடு, அக்கராயன், கல்விளான், பெரியவிளான் குளங்களையும் ஏனைய குளங்களையும் தக்கமுறையில் பயன்படுத்தி தமிழ்மக்களின் பூமியைபொன் விளையச்செய்வதே'' என்றார்.

திருவாளர்கள் ஏ. தில்லைநாதன், அழகரத்தினம், நடராஜலிங்கம் ஆகியோரும் பேசினர். (உ)

# "இன்றைய இளைஞர்களின் அரசியல் விழிப்புணர்ச்சி"

யாழ்ப்பாணம், புதன்
''எதிர்காலத்தில் தமிழர் தலைவிதியை நிர்ணயிக்கும் சர்வஜன வாக்கெடுப்பு இத்தேர்தல் எனக்கூறும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர், இளைஞர்கள் தகுந்த முறையில் சிந்தித்துச் செயலாற்ற சிறந்த கொள்கை விளக்கத்தை உடன் அளிப்பரா?''

இவ்வாறு ஊர்காவற்றுறை தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளராகப் போட்டியிடும் திரு.ம.அமிர்தலிங்கம் அனலைதீவில் கட்சிக் கிளை ஒன்றினைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

இக் கூட்டத்திற்கு திரு. க. கணபதிப்பிள்ளை தலைமைதாங்கினார் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில், ''கூட்டணியினருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி ஐ.தே. கட்சி பிரசனைகளைத் தீர்க்கும். இன்றைய இளைஞர்கள் அரசியல் பொறுப்புணர்ச்சி பெற்றவர்கள்''என்றார். திருவாளர்கள் இ நடேசன், க.சிவனடியான், கதிரேசு முதலானோரும் பேசினர். (கா-உ)

# "இனத்தின் இன்னல் களைவதில் ஆசிரியர்க்கும் பங்குண்டு"

## கிளிநொச்சி த. ஆ. ச. தலைவர் உரை

கொடிகாமம், செவ்வாய்
''ஒரு நாட்டில் தனது இனத்தின் மொழி, கலை, கலாச்சாரத்திற்கு ஆபத்து ஏற்படும்போது அவற்றை முறியடிக்கும் பொருட்டு ஆசிரியர்களும் தம் பங்கினைச் செலுத்த வேண்டும்'' என்று சாவகச்சேரித்தொகுதி தமிழர்விடுதலைக்கூட்டணி வேட்பாளர் திரு. வி என். நவரத்தினத்தை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கிளிநொச்சித் தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. வி. தர்மலிங்கம்பேசுகையில் கூறினார். மட்டுவில் வடக்குக் கண்ணகை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் திரு கே. சுப்பிரமணியம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில் இலங்கையில் சிறுபான்மை இனம் நசுக்கப்பட்டு பிரிந்து வாழ முற்படும்போது அந்த இனத்தின் ஆசிரியர்களும் தேர்தல் பிரசாரத்தில் இனவிடுதலைக்காகப் போராட வேண்டியது முக்கிய கடமையாகும்'' என்றார்.

சட்டத்தரணி திரு. மு. திருநாவுக்கரசு திரு. சிவராசா, திரு விமலநாதன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (உ)

REGAL (JAFFNA) Daily: at 4-45, 7-00 & 9-30 p. m. only

ROBERT LOUIS STEVENSON'S CLASSIC

TREASURE IsLAND

(Color)

சாந்தி யாழ். நகரி போன்: 7642 தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ரோனி ரணசிங்க, நீற்ற பெனுர்ன்டோ

W. M. S. தம்புவின்

DEIYANGE DHEENDUWA

(சிங்களம்)

நல்ல தீர்ப்பு

தமிழ் ஆக்கம்

RIO (Jaffna) Daily 10-30 ,4-45,7-15, 9-45 p.m.

Today only

Gun Fight At Comacoa Creek

From Tomorrow

SECRET AGENT OSS 117

வெலிங்டன் [யாழ். நகர்] தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்

எஸ். எஸ். ஆர். - விஜயகுமாரி பூம்புகார்

15-ந் திகதி முதல் தாய் இல்லாக் குழந்தை

லிடோ போன்: 7693 (யாழ். நகர்) தினசரி 10-30, 2-30, 6-30, 9-45

ஜெமினி — சாவித்திரி

பத்தினித் தெய்வம்

15-7-77 முதல்

ஒரு மகாராணி

மனோகரா தினசரி 4 காட்சிகள்

[யாழ்ப்பாணம்] சுந்தரராஜன்-சௌகார்ஜானகி

ஆ ல ய ம்

வெகு விரைவில் வருகிறது

எம். ஜி. ஆர் — லதா நடித்த

உழைக்கும் கரங்கள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி நடித்த

தினசரி 4 காட்சிகள்

ஜெயேந்திரா மூவிஸ்

காத்திருப்பேன் உனக்காக

ராஜா (யாழ்நகர்) போன்: 7180

67-வது தினம்

தினசரி 4 காட்சிகள்

தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன்கலர்)

குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

ராணி (யாழ்ப்பாணம்)

70-வது நாள்

எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த

தினசரி 4 காட்சிகள்

நாளை நமதே

(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

மகத்தான 2-வது மாதம்

சிவாஜி - பத்மப்பிரியா

முத்துராமன் - சகுந்தலா நடித்த

ஸ்ரீதரின் வைரநெஞ்சம்

(ஈஸ்ட்மன் கலர்)


## 25 வருட ...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்து பிரிந்து சென்று ஜின்னு பாகிஸ்தானை அமைத்தபோது, பாகிஸ்தானின் ஏனைய பகுதிகளில் அப்போது முஸ்லிம்கள் வாழவில்லையா? பாகிஸ்தான் பிரிந்தபோதும் இன்றுஇந்தியாவில் முஸ்லிம்கள் இல்லையா: அவர்கள் பாகிஸ்தான் பிரிவதற்கு ஆதரவு அளிக்கவில்லையா?

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஒரு தொழிற்சங்கமாக மாத்திரமன்றி அதன் அரசியற்பிரிவு தமிழர் பிரச்னைகளிலும் பலமான ஈடுபாடு கொண்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழர்களுக்கும் சமஉரிமைகோரும் இ. தொ. கா. வடக்கு கிழக்கில் தனி அரசு அமைப்பதை அங்கீகரிக்கிறது.

### செல்லச்சாமி

திரு. எம். எஸ். செல்லச்சாமி பேசுகையில் கூறியதாவது: செல்லச்சாமிக்கு வாக்குப் போட்டால் அவர் என்ன செய்வார்? என்று சிலர் கேட்கிறார்கள். இந்நாட்டின் ஒரு கோடி 20 லட்சம் மக்களுக்குச் சோறுபோடும் மலையகத் தொழிலாளியின் துன்பங்களை அரசு மூடிமறைத்தபோது, அவர்களின் உண்மையான நிலையை தொலைக்காட்சியில் படம்பிடித்து லண்டன் மாநகரில் காண்பிக்கச்செய்து—லண்டன் துறைமுகத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள், இலங்கை அரசாங்கம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு போதுமான சம்பளம் வழங்காவிடில் இலங்கைத் தேயிலையை நாம் கப்பல்களிலிருந்து இறக்கமாட்டோம் என்று ஆர்ப்பாட்டம் செய்யும் நிலையையும் நாம் ஏற்படுத்தவில்லையா? இந்த சக்தி தொழிலாளர் வர்க்கத்தின் சக்தி இங்கு பிரச்னைக்கு தீர்வுகாணப் படாவிட்டால் — எமது குரலுக்கு செவிசாய்க்கப்படாவிட்டால் உலக அரங்கில் நாம் பிரச்னையை அம்பலமாக்குவோம்.

இங்குள்ள கம்யூனிஸ்ட் வாதிகள் மேல் மாடிகளில் சொகுசு அனுபவிப்பவர்கள் என்று அமைச்சர் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா பகிரங்கமாகவே கூறியபோதும் அமைச்சராகவிருந்த திரு. கெனமன் வெளியேறினாரா?

### ஈழவேந்தன்

திரு. ஈழவேந்தன் பேசுகையில் தமிழர்விடுதலைக்கூட்டணி இம்முறைத் தேர்தலில் சகல தொகுதிகளிலுமே வெற்றி பெறும் என்றார்.

ஊர்காவற்றுறைத் தொகுதி இளைஞர் பேரவைத் தலைவர் திரு. எஸ். கே. மகேந்திரன் உட்பட வேறுபலரும் உரையாற்றினர்.


வெஸ்லி

(மானிப்பாய்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

சிவாஜி-மஞ்சுளா

அன்பே ஆருயிரே

புலோலி சினிமாஸ்

(பருத்தித்துறை)

தினசரி 6-30 9-45

சனி, ஞாயிறு 2-30

சிவாஜி-சௌகார்ஜானகி

மோட்டார் சுந்தரம் பிள்ளை

நாகம்ஸ்

(சுன்னாகம்)

தினசரி 6-30, 9-30

சனி ஞாயிறு 2-30

சிவகுமார் - ஜெயசுதா

பட்டிக்காட்டு ராஜா


# ஆசிரியர் நியமனம்

## தீவுப்பகுதியில் அநீதி'

### அதிபர் சங்கம் கண்டனம்

வேலணை, செவ்.

அரசாங்கத்தினால் அண்மையில் வழங்கப்பட்ட தராதரப்பத்திரமற்ற ஆசிரியர் நியமனங்கள் தகுதியான முறையில் கொடுக்கப்படவில்லை என்றும் இந்நியமனம் பெறக்கூடிய தகுதி பெற்றவர்கள் தீவுப்பகுதியில் இருந்தும் தகைமையற்றவர்கள் நியமனம் பெற்றிருப்பதாகவும் தீவுப்பகுதிப் பாடசாலை அதிபர் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

வேலணை சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் திரு. வி. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் இக்கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை இன்னமும் நீக்கப்படாதது குறித்து கவலை தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பாடசாலைகளின் தேவைகளை ஐந்தாண்டுத் திட்டத்திற்கு அமைய வகுக்கப்பட வேண்டும் என்றும் இதுதொடர்பாக கல்வி அமைச்சரையும் வடமாநில கல்விப் பணிப்பாளரையும் ஐவர்கொண்ட தமது பிரதிநிதிகள் குழு ஒன்று பேட்டி காண்பதென்றும் தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. (உ)

### தீவுப்பகுதியில்

## முற்போக்கு விவசாயிகள் கழகம் அங்குரார்ப்பணம்

வேலணை, செவ்

சரவணை புளியங்கூடல், சுருவில் பகுதிகளை உள்ளடக்கிய முற்போக்கு விவசாயிகள் கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு கிருமிநாசினிகள், பசளை வகைகளைப் பெற்றுக்கொடுத்தல், விதை வகைகளை அவ்வப்பகுதியில் இருந்து பெற்றுக்கொடுத்தல், விவசாயக்கடன். இயந்திரங்கள் பெறுவதில் சிரமத்தைத் தவிர்த்தல் என்பனவற்றை நோக்கங்களாகக்கொண்டு இக்கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது

இக்கழக அங்குரார்ப்பணத்தை யடுத்து தீவுப்பகுதி விவசாயப் போதனாசிரியர் திரு. க. சிவக்கொழுந்து தலைமையில் யாழ். விவசாயப் போதனாசிரியர்கள் விவசாயிகள் அடங்கிய கருத்தரங்கு ஒன்றும் நடைபெற்றது. (உ)

## சேவைக்குப் பாராட்டு

வேலணை, செவ்.

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின்போது யாத்திரிகர் வசதி கருதி சிறந்த ஏற்பாடுகளை மேற்கொண்ட வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியத்தைப் பல பொதுஸ்தாபனங்களும் யாத்திரிகர்களும் பாராட்டியுள்ளனர். (உ)

### வாக்காளருக்கு...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ளார்.

அக் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: "மேலேகூறப்பட்ட விடயங்களை எனது இலட்சியமாகவும் கொள்கையாகவும் முன்வைத்து இத் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனது தொகுதி மக்களுக்கும் தமிழ் பேசும் மக்களுக்கும் இன, மத, பிரதேச வேறுபாடின்றிசேவை செய்வேன் என்பதை உறுதியாக உங்களுக்குக் கூற விரும்புகிறேன்". (கு)

### சந்திரகாசன்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இவ்வறிக்கையில் திரு. அ. அமிர்தலிங்கம் ஒரு பிழை விட்டுள்ளார். அவர் 'தமிழ்த் தேசிய இனம்' என்கிறார். இதனால் 35 லட்சம் தமிழ்ப்பேசும் மக்களையும் குறிப்பிடுகின்றார். எனினும் இவ்வறிக்கை வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் உள்ள தமிழ் மக்களது கருத்துக்களைப் பிரதிபலிக்காததாக உள்ளது."

திருவாளர்கள்: ஆர். ஈ. ஆனந்தராசா, கே. சி. கிட்ணர், புதுமைலோலன், த. மகேந்திரராஜா ஆகியோர் உட்படப் பலர் உரையாற்றினர். (கூ)

## ரிக்கட்மெஷினை தொலைத்த கண்டக்டர்

யாழ்ப்பாணம், புதன்

பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு இன்னமும் ஒரு வருடகாலமே உள்ளவர் எனக் கூறப்படும் இ. போ. ச. பஸ் கண்டக்டர் ஒருவரின் 'ரிக்கட்' மெஷின் காணமல் போய்விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதிக்கு சமீபமாக இந்த ரிக்கட் மெஷின் கடந்த 10-ம் திகதி இரவு8-30 மணியளவில் காணமல் போய்விட்டதாம்.

திரு. வி எஸ். பொன்னையா என்ற பிரஸ்தாப வயோதிப கண்டக்டரின் பரிதாபநிலையை உணர்ந்து தவறுதலாக அந்த மெஷினை எடுத்தவர் பெரும் மனிதாபிமானத்துடன் ஒப்படைத்தால் நன்று என்றுயாழ்ப்பாணம் மத்தியடிப்போ உதவிப் பொறுப்பதிகாரி திரு. சொக்கலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (உ)

## 'குடிநீர் கிடைக்கும்'

அரியாலை, செவ்

"இக்கிராமத்து மக்கள் குடிதண்ணீர் பெறும் விஷயத்தில் மிகவும் கஷ்டமடைந்து வருகிறார்கள் என்பதை நான் அறிகிறேன். இவ்வூரிலுள்ள புவனேஸ்வரி அம்பாள் ஆலயவளவிலுள்ள நல்ல தண்ணீர்க் கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு தண்ணீர்த்தாங்கி அமைத்துத் தர நாம் வேண்டிய உதவிகள் செய்து தருவேன்" என்று தொழிலதிபர் திரு. இ. அரசரத்தினம் அரியாலை காந்தி சனசமூக நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார். கூட்டம் நிலையத்தலைவர் திரு. த. இராமலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு முன்னர் திரு. அரசரத்தினம் தம்பதிகள்வெட்டுக்குளம் புவனேஸ்வரி ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ பூஜையில் கலந்து கொண்ட பின்னர் ஊர்வலமாக வெள்ளி விழா அரங்குக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிலையச்செயலாளர் திரு எம். பி. ஜீவானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார்- காந்திசனசமூக நிலைய மாதர் சங்கப் பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் இவ் வைபவத்தில் கலந்துகொண்டனர். (அ)

# ஈழநாடு

The EELANADU


## "பிரதேசத்தை பாதுகாக்க கூட்டணியை ஆதரியுங்கள்"

— தா. திருநாவுக்கரசு

பண்டத்தரிப்பு, செவ்வாய்

''தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் நாளுக்கு நாள் பறி போய்க்கொண்டிருக்கின்றன. திருக்கோணமலை மாவட்டத்தில் பெரும்பான்மை மக்களுக்கென்று தனியாக ஒரு தொகுதி அமைக்கும் அளவுக்கு நிலைமை வந்துவிட்டது. எஞ்சியுள்ள எங்கள் பிரதேசங்களும் இனிமேல்பறிபோகாது இருப்பதற்காகவே தனிநாடு கோருகின்றோம்''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. தா. திருநாவுக்கரசு வடலியடைப்பில் தம்மை ஆதரித்து நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சங்கானை மேற்கு வடலியடைப்பு சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. நா. சொக்கலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. திருநாவுக்கரசு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

'யாழ்ப்பாணத்திலும்இன்று சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகின்றது. காங்கேசன்துறையிலும் குடியேற்றம் நடைபெறுகின்றது. இந்த நிலைமை நீடித்தால் எமது சுயாதிபத்தியத்தை எமது சொந்தப் பிரதேசங்களிலேயே இழந்துவிடுவோம். ஆகவே தமிழ் ஈழத்தை நிறுவி எமது பிரதேச எல்லைகளை திட்டவட்டமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.''

இக்கூட்டத்தில் திரு. த. சந்ததியார், வைத்தியகலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி உட்படப் பலர் உரையாற்றினார்கள். (உ)

## சுவாமி விபுலானந்தர் உருவப்படம்

யாழ்ப்பாணம், புதன்

சுவாமி விபுலானந்தர் உருவப்படம், யாழ். வளாக நூலகத் தென்னாசிய வியல் அறையில், பேராசியர் க. கைலாசபதியினால் நாளைபிற்பகல் 3 மணிக்கு திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

சுவாமி விபுலானந்தர் எழுதிய நூல்களும், சுவாமி விபுலானந்தர் பற்றி எழுதப்பட்ட நூல்களும் காட்சிக்கு வைக்கப்படும். (க)

## "மக்களின் கஷ்டத்திற்கு அரசுதான் காரணம்"

கொழும்பு, செவ்.

1970-ம் ஆண்டு தேர்தலில் ஐ. தே. கட்சி ஆட்சிக்கு வந்திருந்தால், நாட்டில் உணவு உற்பத்தியை பெருக்கி இன்று மக்களுக்கு இரண்டு கொத்து அரிசி வழங்கியிருப்போம்.

கெக்கிராவாவில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய, அக்குருணை முன்னாள் எம். பி. திரு. ஏ. சி. எஸ். ஹமீட் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ஹாமீட் மேலும் கூறியதாவது, மக்களின் கஷ்டங்களுக்கு தற்போதைய அரசுதான் முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

மகாவலி திட்டத்தை அமுல் நடத்துவதில், இரண்டு வருடம் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. ஏற்கனவே உத்தேசிக்கப்பட்டதுபோல, உரிய காலத்தில் அமுல் நடத்தப்பட்டிருந்தால், நாட்டு மக்கள் 1975-ம் ஆண்டிலேயே போதிய உணவைப் பெற்றிருப்பார்கள்.

1965-ம் ஆண்டு முதல் 1970-ம் ஆண்டுவரை ஆட்சி புரிந்த ஐ. தே. கட்சி நிர்வாகமே மகாவலி திட்டத்தை மிககவனமாக தயாரித்ததென்பதை மக்கள் மறந்துவிடக் கூடாது.

## உற்சவம்

வண்ணை சிவன் கோவில் அம்பாள் திருவிழாவாகிய 3-ம் நாளான இன்றுபகல் திருவிழா 9 மணிக்கு நடைபெறும். மாலை 6மணி முதல் 7-30 மணி வரை செல்வி புஷ்பா செல்வநாயகம் ''சக்திவழிபாடு'' என்ற பொருள்பற்றி கதாப் பிரசங்கம் செய்வார். இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும்பின் அம்பாள் அன்ன வாகனத்தில் வீதிவலம் வருதலும் நிகழும். (அ)

0 0 0

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோவில் அலங்கார உற்சவம் இன்று ஆரம்பமாகி பத்துத் தினங்கள் தொடர்ந்து நடைபெறும். தினசரி பகல் 12 மணிக்கு அபிஷேகமும் இரவு உற்சவமும் நடைபெறும்.

14-ந் திகதி வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு சங்காபிஷேகமும் 22-ந் திகதி வெள்ளிக்கிழமை சப்ரத்திருவிழாவும் 23-ந் திகதி சனிக்கிழமை அன்னதானமும் நடைபெறும். (கா-அ)

## அரியாலை கொலை: சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், புதன்

அரியாலையில் கடந்த சில வாரங்களுக்கு முன் முருகேசு என்ற 72 வயது வயோதிபர் ஒருவர் விஷம் பருக்கிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டுவந்த எஸ். சிவலிங்கம் என்ற இளைஞர் மருதனாமடத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார். சுன்னாகம் பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. சிவபாலசுந்தரத்திற்குக் கிடைத்த தகவலையடுத்து சப்இன்ஸ்பெக்டர் பெரேரா பிரஸ்தாபநபரைக் கைதுசெய்தார்

இவர் கொலையுண்டவரது உறவினர் எனக் கூறப்படுகிறது. (உ)

## பருத்தித்துறை—

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேலை நிறுத்தம் செய்வோர் வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

### தபால் விநியோகம்

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நேற்று தபால்பை விநியோகம் தபால் இலாகா வான்களால் மேற்கொள்ளப்பட்டது

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு மெயில் ரயிலில் வந்த தபால்பைகள், நேற்று காலை வான்கள்மூலம் வடமராட்சிப்பகுதியிலுள்ளதபால் நிலையங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. (க-உ)

## சட்டசபையில்...

( 1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடி சொல்ல நேர்கிறது என்றார் அன்பழகன்

அரசாங்கத் தரப்பு உறுப்பினர் மணிமாறன் பேசிக்கொண்டிருக்கையில் முன்னைய அரசு மதுவிலக்கை ஒத்திவைத்ததுபற்றிக் குறிப்பிட்டார். எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி குறுக்கிட்டு மதுவிலக்கை ஒத்திவைப்பது தொடர்பாக அப்போது நடைபெற்ற கழக பொதுக்குழுக் கூட்டத்தில் இப்போதைய முதல்வர் ஆதரித்துப் பேசினார் என்றார். மதுவிலக்கை ஒத்திவைப்பதை ஆதரித்து அவர் எழுதிய கட்டுரை ஒரு பத்திரிகையிலும் வந்துள்ளது என்றார் கருணாநிதி. இந்தச் சமயத்தில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.சபையில் இருந்த நேரத்தில் குறுக்கீடு எதுவும் செய்யவில்லை.

## 9 விக்கட்டுகளால் இங்.வெற்றி

மான்சஸ்டர், ஜூலை 12

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையில் மான்சஸ்டரில் நடைபெற்ற இரண்டாவது கிரிக்கட் டெஸ்டில் இங்கிலாந்து 9 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது.

ஸ்கோர் விபரம்:

ஆஸ் : 297,218

இங்.: 437,82

## பஸ்தரிப்பு நிலையங்கள் மாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். பஸ் நிலையத்தில் காரைநகர் இ. போ. ச. டிப்போவினால் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் நிறுத்தப்படும் இடங்கள் மாற்றப்பட்டுள்ளன.

மின்சார நிலைய வீதியில் யாழ் உப தபால் நிலையத்திற்கு முன்னிலையிலேயே இந்த தரிப்பு நிலையங்கள் இப்போது அமைக்கப்பட்டுள்ளன.

782, 783, 784, 785, 786 ஆகிய பாதை இலக்கங்களைக் கொண்ட காரைநகர் நோக்கிச் செல்லும் பஸ்களும் பண்டத்தரிப்பு, சங்கானை, சுழிபுரம் ஆகிய இடங்களுக்குச் செல்லும் 789-ம் இலக்க பஸ்களுமே புதிய இடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (இ)

## குடும்பத்துக்கு 3 தீப்பெட்டிகள்

கொழும்பு, செவ்வாய்

25 லட்சத்து 20 ஆயிரம் தீப்பெட்டிகளை அரசாங்கம் இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்துள்ளது.

உள்ளூரில் உற்பத்திசெய்யப்படும் 10 லட்சம் தீப்பெட்டிகளுடன் இறக்குமதிசெய்யப்பட்ட தீப்பெட்டிகளையும் சேர்த்து குடும்பத்திற்கு 3 தீப்பெட்டிகள் வீதம் பங்கீட்டு அடிப்படையில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என்று கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## துரையப்பா வழக்கு விசாரணை செப்.12ம் திகதி

கொழும்பு, செவ்வாய்

துரையப்பா கொலை ரிட் மனு மீதான விசாரணை செப்ரெம்பர் மாதம் 12ந் திகதி கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

இவ் ஒத்திவைப்பு சம்பந்தமாக எதிரிகள் சார்பு சட்டத்தரணி திரு.எஸ். மகேந்திரராஜா அப்பீல் ஒன்றை மனுச் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கூவிப் முடிவுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 45 D 0039 | 47 D 0530 |
| 48 D 0638 | 49 D 0412 |
| 04 E 0852 | 05 F 0145 |
| 08 E 0654 | 39 E 0220 |
| 36 F 0119 | 04 G 0779 |
| 24 G 0997 | 37 G 0753 |
| 45 G 0590 | 07 H 0625 |
| 28 H 0206 | 35 H 0425 |
| 38 H 0463 | 43 H 0841 |
| 04 J 0463 | 12 J 0725 |
| 15 J 0408 | 19 J 0027 |
| 19 J 0060 | 19 J 0138 |
| 22 J 0422 | 06 K 0278 |
| 26 K 0783 | 49 K 0826 |
| 17 L 0201 | |
| 23 L 0867 | 35 L 0262 |
| 44 L 0393 | 14 M 0620 |
| 22 M 0016 | 34 M 0510 |
| 09 N 0358 | 28 N 0284 |
| 34 N 0050 | 40 N 0173 |
| 40 N 0335 | 45 N 0273 |
| 01 O 0933 | 08 O 0181 |
| 12 O 0891 | 40 O 0394 |
| 07 P 0099 | 35 P 0601 |
| 15 Q 0155 | 45 Q 0022 |
| 48 Q 0861 | 44 R 0685 |
| 21 S 0554 | 24 S 0491 |
| 49 S 0171 | 06 U 0064 |
| 16 U 0815 | 17 U 0912 |
| 26 U 0341 | 35 U 0884 |
| 41 U 0215 | 41 U 0788 |
| 13 V 0103 | 21 V 0161 |
| 38 V 0231 | 40 V 0588 |
| 11 W 0776 | 19 W 0309 |
| 22 W 0269 | 05 X 0888 |
| 06 X 0624 | 42 X 0692 |
| 44 X 0852 | 25 Y 0037 |
| 35 Y 0665 | 14 Z 0459 |
| 14 Z 0739 | 19 Z 0500 |
| 41 Z 0653 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்)

# கன்னாதிட்டிக்குள அபிவிருத்தித் திட்டம்

## மாணவர்களின் ஆக்கமுயற்சி

1972ல் கல்வி அமைச்சினால், கல்வி புகட்டும் முறையில் காணப்பட்ட சில அடிப்படை குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்ட புதியகல்வித் திட்டத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சமாகக் கருதப்படுவது செயல் திட்டம் ஒவ்வொரு மாணவனையும் தனக்கும் தன் சமூகத்திற்கும் நாட்டின் பொருளாதாரத்திற்கும் பயனளிக்கும் வகையில் உருவாக்கி ஒருசெயல்திறன் மிக்க மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே அதன் நோக்கம் என கல்வி அமைச்சு அதற்கு விளக்கம் கூறியுள்ளது.

அப்பாதையில் ஒருமைல் கல்லாக அமையப் போகின்றதென திண்ணமுடன் எதிர்பார்க்கும் வண்ணம் யாழ் மத்திய கல்லூரி தேசிய உயர் கல்வி இரண்டாம் வருட மாணவர்கள் கன்னாதிட்டி குள அபிவிருத்தித் திட்டம் எனும் செயல் திட்டத்தை வரைந்துள்ளனர்.

கன்னாதிட்டி வீதியில் காளி கோயில் முன்பாக அமைந்திருக்கும் அக்குளம் ஏறத்தாழஐந்து ஏக்கர் விஸ்தீரணம் உடையது. தற்போது தூர்ந்த நிலையில் காணப்படும் இக்குளம் நுளம்புகளின் ஆதிக்கத்திற்குட்பட்டு சுற்றாடலுக்கு ஓர் தலையிடியாக அமைந்து வருகிறது. மாணவர்கள் அங்கு நடாத்திய பல ஆய்வுகளின் பெறுபேறுகளிலிருந்து அதன் சுற்றாடலில் குடிசனத்தொகை அதிகமாகவும் அவர்களின் பொருளாதாரம் ஓரளவு திருப்திகரமாக உள்ளதாகவும் அவர்கள் தொழில்நுட்ப அறிவு மிக்கவர்களாய் காணப்படுவதாகவும் தெரிகிறது எனினும் சுகாதார வசதிகள் குறைவு இவர்களையும் தம் செயல் திட்டத்தில் ஒன்றிணைக்க மாணவர்கள் எடுத்துள்ள முடிவு சிறப்பு அம்சங்களிலொன்று.

மாணவர்கள் மேற் கொள்ளப் போகும் செயல் திட்டத்தின் படிமுறைகள் பின்வருமாறு:

### ஒரு நூலகம் அமைத்தல்

(1)அத்திவாரம் மட்டும்எழுப்பப்பட்டுள்ள நிலையில் குளத்திற்கு அண்மையில் காணப்படும் கட்டிடத்தைப் பூர்த்தி செய்து அதை ஓர் நூலகமாக ஆக்குதல்.

(2)குளத்தை ஆழமாக்கி மீண்டும் அதை ஓர் நன்னீர் குளம் ஆக்கல்

(3)குளத்தைச் சுற்றிப் பலமான அணையொன்றை ஏற்படுத்தல்

(4)குளத்தின் ஏனைய பகுதிகளை நிரப்பி நிலமாக்கல்

(5)வடிகால்களைத் திருத்தியமைத்து வண்ணான் குளத்தை நோக்கி நீரை ஓடச் செய்தல்

(6)பெருமாள் கோவிலிற்கு பின் இருக்கும் பாதையை நிலமாக மாற்றி அமைத பாதைக்கு மேல் தொடர்ந்த கஸ்தூரியார் வீதியுடன் கன்னாதிட்டி வீதியையும் இணைத்தல்.

இவையாவும் பூர்த்தியாக்கப்பட்ட பின் சுற்றாடலில் காணப்படும் பல்வேறுபட்ட தொழில் வல்லுநர்களின் அனுசரணையுடன் அங்கு ஓர் கைத்தொழில் பேட்டையினையும் உருவாக்க மாணவர்கள் முடிவு செய்துள்ளனர். இதற்கு அரசு உதவி செய்வதாகவும் காக்களித்துள்ளது. உருவாகும் கைத்தொழில் பேட்டையிலிருந்து சகல கல்லூரி மாணவர்களும் தொழினுட்ப அறிவைப் பெற்றுக் கொள்ளவும் வசதி செய்யப்படும்.

இன்று மனம்விட்டுப்பாராட்டத்தக்க வகையில் திட்டமிட்டுள்ள யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் தற்போது அதற்குத் தேவையான நிதி சேகரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதற்கான கன்னிமுயற்சியாக வரும் 15ந்திகதி வெள்ளியன்று சாந்தி திரை அரங்கில் ஓர் நிதியுதவிக் காட்சியை நடாத்தவுள்ளனர். இத்தகைய முயற்சிகளை ஊக்குவிக்கவேண்டியது நம் கடமை. அதை உணர்ந்து செயலாற்றுவோமாக. அத்துடன் இவ்விளஞ் சமுதாயத்தின் இலட்சியமிகு முயற்சிகள் இனிது நிறைவேறிட வாஞ்சையுடன் வாழ்த்துவோமாக!

—புத்திரசிங்கம்

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேலைவீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 [Registered as News paper in Sri Lanka.